DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan, Broker
Joy H. Selvanayagam, Broker
Homelife/Future Reality Inc., Brokerage

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative
Ragu Thillainathan, Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tel : 647-344-6600

KANAGAAMBIKAI PAWN BROKERS
2613 Eglinton Ave, East, Scarborough, ON M1K 2S2, Canada
416 269 7198

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

25வது ஆண்டை நோக்கி
Towards 25th Year in Publishing
www.uthayannews.ca
UTHAYAN
# உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
$1.00
Tel : 416-752-1524
Fax: 416-752-6703
உதயம் 1279
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday October 9, 2020

# அமெரிக்க தேர்தலுக்குப் பின்னர் எமக்கு சில இடையூறுகள் வரலாம்.

## எனவே அதை எதிர்கொள்ள நாம் தயாராக இருக்கவேண்டும் என்கிறார் கனடியப் பிரதமர் ட்ருடோ



இன்னும் சில நாட்களில் நடைபெறவுள்ள அமெரிக்காவின் ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் எமக்கு சில இடையூறுகள் வரலாம். ஆனால் அதை எதிர்கொள்ள நாம் தயாராக இருக்கவேண்டும் என்கிறார் கனடியப் பிரதமர் ட்ருடோ இவ்வாறு நேற்று ஒட்டாவாவில் தெரிவித்துள்ளார் கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ருடோ அவர்கள். பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த அவர் பின்வருமாறு கூறினார்.

“நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் அந்த நாட்டில் பல பிளவுகளை ஏற்படுத்தலாம் என்பதற்கான பல சம்பவங்கள் அங்கு நடைபெறத் தொடங்கியுள்ளன. நாம் விரும்பத்தகாத விடயங்கள் அங்கு இடம்பெறலாம். தற்போதைய ஜனாதிபதி ட்ரம்ப் அவர்கள் சில வேளைகளில் தான் தோல்வியடைய நேரிட்டாலும், வெற்றிபெற்றவர் பதவியில் அமர்வதற்கு இடையூறாக இருப்பார் என்ற எதிர்பார்ப்புக்கள் அவரது உரையாடல்தகளிலிருந்து தெரிகின்றதாக பல அமெரிக்கத் தலைவர்கள் கூறியுள்ளார்கள். எனினும் எமது கனடிய அரசாங்கமானது நவம்பர் 3ம் திகதிய ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் ஒரு தெளிவான தீர்வு கிடைக்கும் என்று நாம் நம்புகின்றேன்’’ என்று பிரதமர் தெரிவித்தார்.

.அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நாம் மட்டுமல்ல, உலகில் வாழும் பலர் இதனையே விரும்புகின்றார்கள். இந்த தேர்தலின் பின்னர் தெளிவான முடிவு வரவேண்டும். அதற்கு அனைவரும் கட்டுப்பட வேண்டும். அவ்வாறு நாம் அனைவரும் எதிர்பார்க்கின்ற தெளிவான ஒரு நிலை தோன்றாவிட்டால், அதன் மூலம் பல இடையூறுகள் வரலாம். அவ்வாறான முடிவுகள் எமது நாட்டையும் பாதிக்கலாம். எனவே அமெரிக்கத் தேர்தலின் பின்னர் தோன்றவுள்ள அரசியல் நிலைப்பாடுகளுக்கு முகங்கொடுக்க நாம் தயாராக இருக்க வேண்டும்’’ என்றும் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ தெரிவித்தார். தொடர்ந்து பத்திரிகையாளர் கேட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த பிரதமர் ”அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றவர் தொடர்பான அறிவிப்பு வருவதற்கு கூட பல நாட்கள் காத்திருக்கக் கூடிய நிலை கூடத் தோன்றலாம். ஏவ்வாறாயினும் ட்ரம்ப் அல்லது பைடன் வெற்றிபெற்றாலும் கனடா தொடர்பான அரசியல் மற்றும் பொருளாதார விடயங்களில் எவ்வாறு அவர்களில் ஒருவ-ரோடு பணியாற்றுவது என்பதை தீர்மானிக்க வேண்டிய அவசியம் தோன்றியுள்ளது’’ என்றும் பிரதமர் தெரிவித்தார்.

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line Visit
(416) 489-2000 GtaCredit.Com
North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
905 272 1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905 794 4404

**Government of Canada announces details for opening of 2020 Parents and Grandparents Program**

# பெற்றோர்களையும் பெற்றோர்களின் பெற்றோர்களையும் கனடாவிற்கு அழைப்பதற்கான விபரங்களை கனடிய குடிவரவு,அமைச்சர் வெளியிட்டார்

கனடாவில் குடியுரிமை பெற்றவர்கள், தங்கள் பிறந்த நாட்டிலோ அன்றி வேறு எந்த நாட்டிலோ வாழும் தங்கள் பெற்றோர்களை அல்லது பெற்றோர்களின் பெற்றோர்களை கனடாவிற்கு அழைப்பதற்கு விரும்பினால் அதற்கு தேவை-யான விபரங்களை கனடிய குடிவரவு, அகதிகள் விவகாரங்கள், குடியுரிமை அமைச்சர் Honourable Marco E. L. Mendicino, நேற்று முன்தினம் புதன்கிழமையன்று கனடாவின் தலைநகரமான ஒட்டாவாவில் வைத்து வெளியிட்டார்.

இந்த திட்டத்தின் மூலம் குடும்பங்களை இணைக்க வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்றும் அமைச்சர் அங்கு குறிப்பிட்டார்.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 13ம் திகதி தொடக்கம் நவம்பர் மாதம் 3ம் திகதி வரையும் உள்ள காலப்பகுதிக்குள், கனடாவில் வாழும் பிரஜாவுரிமை பெற்றவர்கள் அலலது நிரந்தரக்குடியுரிமை பெற்றவர்கள் ஆகி-யோர் இணைய வழி மூலம் இதற்குரிய விண்ணப்பங்களை அனுப்பலாம் என்று தெரிவித்த அமைச்சர் அவர்கள் இதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் தகுந்த முறை-யில் செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவித்துள்ளார்.



இந்த திட்டத்தின் மூலம் தங்கள் பெற்றோர்களை அல்லது பெற்றோர்களின் பெற்றோர்களை கனடாவிற்கு அழைப்பதற்கு விரும்பு விண்ணப்பிக்கின்றவர்களுக்கு சமமான வாய்ப்புக்களை

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
✓ Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

ZY RENOVATION
உங்கள் இல்லங்கள் அல்லது பண்ணை வீடுகள் ஆகியவற்றில் அழகிய திருத்த வேலைகளைச் செய்து கொள்ள எம்மை அழையுங்கள்
Interior: Staircase Refinishing/ Installation-Flooring/Installation Bathroom/ Kitchen/ Basement Renovations Additions & Extensions
Exterior: Fence/ Interlock/ Deck
ZY- Renovation Call: Ethan@ 647 995 5955

# MORTGAGE SOLUTIONS

## $50,000 EQUITY LOAN

GET APPROVED WITHIN 24 HOURS

416.298.2777

$375 Mo.

www.mortgageSolutions.ca

MONTHLY SAVING $2,478

SAVE UPTO 75% REFINANCE



KIRUBA THANABALASINGHAM

Mortgage Agent Lic# M12002440

Ultimate Mortgage Group Lic 11995

info@mortgageSolutions.ca

Off: 416.298.2777

Dir: 416.894.9122

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | $320,000 @ 2.90% | $1,498.02 | - |
| Auto Loan | $21,000 @ 7.50% | $764.25 | $0.00 |
| Line of Credit - 1 | $16,000 @ 6.50% | $566.67 | $0.00 |
| Line of Credit -2 | $12,500 @ 7.00% | $447.92 | $0.00 |
| Credit Card -1 | $ 8,800 @12.00% | $352.00 | $0.00 |
| Credt Card - 2 | $ 5,200 @ 19.00% | $238.34 | $0.00 |
| Store Card | $ 3,000 @ 24.00% | $150.00 | $0.00 |
| New Mortgage | $386,500 @ 2.39% | | $1,563.00 |
| Total Debt | | $ 386,500.00 | $ 386,500.00 |
| Total Payment | | $4,014.20 | $1,563.00 |

## MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Suganthy, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

**GHURUS TOWING**

Forklift / Machinery move
Local / Long Distance Towing
Recovery Specialist
Flatbed Service
Lockout Specialist
Booster service
Flat Tire

We pay scrap up to $1000



**NIRMALAN (ROGER):**
**(416) 990-7777**
**(416) 984-7777**

**COMPUTER REPAIR**

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

**VARUNAN:**
**(416) 894-6244**

**வீடு வாடகைக்கு உண்டு**

**Bellamy / Lawrence**

சந்திப்பிற்கும் அருகில்
3 அறைகளுடன் கூடிய வீடு
வாடகைக்கு உண்டு.
Close to TTC, GO Train, & all facilities.
Available from November 1st, 2020.
Rent: $2,100

**Call: (416) 671-0085**
**(647) 960-6427**

**ROOM for RENT**

**McCowan / Eglinton**

(43 Blue Lagoon Crt., Scar, ON, M1J 3M3)
சந்திப்பிற்கு அருகில்
1 bedroom in a detached house
with parking spot வாடகைக்கு உண்டு.
Close to GO Train, NoFrills, Walmart,
& many convient stores.

Rent: $650 (Utilities included)TTC,
Available from October 1st, 2020
பெண்கள் மட்டும்.

**Call: 437-235-6130**

**JOBS AVAILABLE**

Jobs Available
in the GTA immediately.

Postitions Available:
- General Labour / Assembler
- Millwright / Machine Operator
- Glaziers / Electrician

Team Global Employment Agency

**Call: (416) 514-0733**
**Email:**
**resume@teamglobal.ca**

**BASEMENT வாடகைக்கு உண்டு**

**Birchmount / Eglinton**

சந்திப்பிற்கு அருகில்
2 bedroom basement with
separate entrance
மற்றும் எல்லாவித வசதிகளுடன்
வாடகைக்கு உண்டு.
Close to TTC, subway, & shopping.
குடும்பம் விரும்பத்தக்கது.

**Call: (416) 821-2181**

உதயன் கதிரோட்டம்

# அமெரிக்காவின் பக்கம் திரும்பியுள்ள உலக மக்களின் பார்வை

அமெரிக்காவில் ஜனாநாயகம் எப்போதும் ஓங்கியே உள்ளது என்ற நம்பிக்கை இருந்தாலும், அதில் நூறு வீதம் உண்மை இருக்கும் என்று கூற முடியாது என்பது உலகின் அரைவாசிப் பேருக்கு உள்ள கருத்தாகும். இற்றைக்கு நாற்பது அல்லது ஐம்பது ஆண்டுகளாக அமெரிக்கா தேசம் உலகெங்கும் யுத்தங்களை மேற்கொண்டமை, உலக நாடுகளில் இனவிடுதலை அல்லது வர்க்க ரீதியாக விடுதலையை நாடி நடத்தப்பெற்ற போராட்டங்களை நசுக்குவதற்காக செலவ செய்து நிதியும் ஆயுதமும் எத்தனை கோடி டாலர் என்பது கூட சரியாகக் கணக்கிட முடியாத ஒரு விடயமாக இருக்கும் அந்த 'உலக எசமான்' நாட்டில்.

இதுவரை எத்தனையோ ஜனாதிபதிகளைக் கண்ட இந்த தேசத்தின் பெருமையை யார் காப்பாற்றினார்கள் என்பதை கணித்துச் சொல்வதற்கு கூட அரசியல் விமர்சகர்கள் எவரும் முன்வருவார்களோ தெரியாது. அந்தளவிற்கு அமெரிக்காவில் மக்கள் வாக்குகளிலும் பார்க்க இரகசியமாகவோ அன்றி அனுமதியோடோ இயங்கின்ற சில ஸ்தாபனங்கள் தான் அங்கு ஆதிக்கம் செலுத்துகின்றன என்பது பல விமர்சகர்களின் பார்வையாகும்.

அமெரிக்க நடத்திய நியாயமற்ற யுத்தங்களுக்கு உதாரணமாக வியட்னாம் மீ-தான தாக்குதல்களை கூறலாம். அப்போது வியட்னாம் மக்களுக்கு ஆதரவாக உலகெங்கும் மக்கள் குரல் எழுப்பினார்கள். "அவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும்," "அமெரிக்கப் படைகள் அந்த மண்ணை விட்டு வெளியேற வேண்டும்" என்றெல்லாம் போராட்டங்கள் உலகெங்கும் நடத்தப்பெற்றன.

அந்த நாட்களில் யாழ்ப்பாணத்திற்கு உத்தியோகபூர்வமாக யாழ்ப்பணத்திற்கு விஜயம் செய்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவருக்கு உடலெங்கும் முட்டைகளை எறிந்து தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தார். அந்த தாக்குதல் நடத்தப்பெற்றது வியட்னாமில் அப்பாவி பொதுமக்களைக் கொன்றொழித்த அந்த ஒரே காரணத்தாற்காகவே யாழ்ப்பாணத்தில் சீனச் சார்பு கொம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் இந்த 'துணிந்த' காரியத்தைச் செய்தார்கள். ஆனால் எங்கள் தமிழினம் போராடும் முறையிலும் கூட பிரிந்து நின்று கசங்கிப் போன காகிதங்களாக நிற்பதைக் காண்கின்றோம்.

அமெரிக்காவின் கடந்த காலம் இவ்வாறிருக்க, இந்த வாரம் அமெரிக்கா பற்றி கதிரோட்டத்தை வடிப்பதற்கு காரணம் இருக்கின்றது. கொரொனாவின் கொ-டுமை காரணமாக அமெரிக்காவும் கனடாவும் நிலம் சார்ந்த தொடர்புகளை கட்டுப்படுத்தி வைத்திருந்தாலும், அமெரிக்காவில் எதிர்வரும் நவம்பர் 3ம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலே உலகின் கண்களை அந்தப் பக்கம் திருப்பியுள்ளது என்று நாம் நிச்சயமாகக் கூறலாம்.

மேலும் நடைபெறவுள்ள அமெரிக்கத் தேர்தல் பற்றி இதுவரை எந்த நாட்டுத் தலைவர்களும் கருத்துக்களை கூற முன்வராத நேரத்தில் நாம் வாழும் கனடா தேசத்து பிரதமர் அவர்கள் துணிந்தும் நியாயத்தை முன்வைத்தும் குறிப்பிட்டுள்ள கருத்துக்களை இந்த வாரம் எமது பத்திரிகையின் முன்பக்கக செய்தியாக பிரசுரமாகியுள்ளது.

இன்னும் சில நாட்களில் நடைபெறவுள்ள அமெரிக்காவின் ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் எமக்கு சில இடையூறுகள் வரலாம். ஆனால் அதை எதிர்கொள்ள நாம் தயாராக இருக்கவேண்டும் என்கிறார் கனடியப் பிரதமர் ட்ருடோ இவ்வாறு நேற்று ஒட்டாவாவில் தெரிவித்துள்ளார் கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ அவர்கள்.

பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த தகவலானது இந்நேரம் உலகெங்கும் உள்ள காதுகளைச் சென்றடைந்திருக்கும்.

எமது பிரதமர் தொடர்ந்து கருத்துக் கூறுகையில் தற்போதைய ஜனாதிபதி ட்ரம்ப் அவர்கள் சில வேளைகளில் தான் தோல்வியடைய நேரிட்டாலும், வெற்றிபெற்றவர் பதவியில் அமர்வதற்கு இடையூறாக இருப்பார் என்ற எதிர்பார்ப்புக்கள் அவரது உரையாடல்களிலிருந்து தெரிகின்றதாக பல அமெரிக்கத் தலைவர்கள் கூறியுள்ளார்கள். என்ற தகவல் கூட அமெரிக்க மற்றும் கனடிய தேசங்களில் வாழும் மக்களை சற்று யோசிக்கச் செய்திருக்கும். இதுவரை நடக்கக்கூடாதது ஒன்று நடக்கப்போகின்றது என்பதை கனடிய பிரதமரே குறிப்பிட்டிருக்கும் போது. உலகம் இனிவரும் நாட்களில் எப்படி செயற்படப்போகின்றது என்பதை நாமும் பொறுத்திருந்த பார்க்கத்தான் வேண்டும்.

# பெற்றோர்களையும் பெற்றோர்களின் பெற்றோர்களையும் கனடாவிற்கு அழைப்பதற்கான விபரங்களை கனடிய குடிவரவு,அமைச்சர் வெளியிட்டார்

*(முன் பக்கத் தொடர்ச்சி)*



வழங்கும் வகையில் கனடாவின் குடி-வரவு, அகதிகள் விவகாரங்கள் மற்றும் குடியுரிமை அமைச்சானது ஒரு தேர்வுத் திட்டத்தின் அடிப்படையில் விண்ணப்பதாரிகளைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு அழைப்பு அனுப்புவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படும்.

இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுவோர் தங்கள் விண்ணப்பங்களை அனுப்ப 60 நாட்கள் கால எல்லை வழங்கப்படும். அங்கக் குறைபாடுகள் உள்ளவர்களுக்கு அவர்கள் இணைய வழி மூலமாக விண்ணப்பங்களை அனுப்ப முடியாதவிடத்து, அதற்கான மாற்று வழி செய்யப்படும். அவர்கள் வாடிக்கையாளர்கள் சேவை நிலையத்தை 1 888 242 2100 என்னும் இலக்கத்தை அழைத்து அல்லது மின்னஞ்சல் மூலம் தங்கள் விண்ணப்பங்களை நவம்பர் 3ம் திகதி வரை அனுப்பலாம்.

தங்கள் பெற்றோர்களை அல்லது பெற்றார்களின் பெற்றோர்களை ஸ்பொன்சர் செய்து கனடாவிற்கு அழைக்க விரும்புவர்களின் வசதிகளுக்கேற்ப இந்த கோவிட்-19 நோய் தொற்று காலத்தில் அவர்களது வருமானத்தை அ இழந்திருந்தாலோ அன்றி வருமானம் குறைந்திருந்தாலோ, கேட்கப்படும் வருமானம் தொடர்பாக சலுகைகள் வழங்கப்பட்டு முன்னர் கேட்கப்படும் முறை தவிர்க்கப்பட்டுள்ளது

இந்த திட்டத்தின் படி 2020ம் ஆண்டு சுமார் 10000 விண்ணப்பங்கள் மட்டும் அமைச்சினால் ஏற்றுக்கொள்ளப்படும் . தொடர்ந்து 2021ம் ஆண்டு இந்தத் தொகை 30000 ஆக அதிகரிக்கப்படும்

கனடிய குடிவரவு, அகதிகள் விவகாரங்கள், குடியுரிமை அமைச்சர் ழுெரசய-டிடந ஆயசஉழ நு. டு. ஆநனெழைஉழைெ, இந்த திட்டம் தொடர்பாக மேலும் பத்திரிகையாளர்களிடம் தெரிவிக்கையில்,

" எமது அரசாங்கம் கனடியர்கள் தங்கள் குடும்பங்களோடு இணைந்து கொள்வதை பெரிதும் விரும்புகின்றது. அதுவும் இந்த நோய் பரவும் ஆபத்து உள்ள நாட்களில் இந்த இணைவு அவசியம் என்பதையும் புரிந்துள்ளது. மேலும் கனடாவின் குடிவரவுத் திட்டமானது உலகில் மிகவும் உயர்ந்தது என்று கருதப்படுகின்றது. காரணம், எமது திட்டம் ஒன்றுதான் பிரிந்து வெவ்வேறு நாடுகளில் வாழும் குடும்ப உறுப்பினர்களை ஒன்றாக இணைப்பதற்கு எப்போதும் கனடா கைகொடுக்கும்" என்றும் தெரிவித்தார்.

இலங்கை செய்திகள்



# யாழ். பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவராக மூத்த விரிவுரையாளர் செல்வி பரமேஸ்வரி கணேசன் நியமனம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பீடத்தின் தலைவராக நியமனம் செய்யப்பட்ட மூத்த விரிவுரையான செல்வி பரமேஸ்வரி கணேசன் சென்ற செவ்வாய்க்கிழமை தமது பதவியைப் பொறுப்பேற்றுள்ளார். காரைநகரைச் சேர்ந்த புகழ் மிக்க இசைப் பாரம்பரியத்திலிருந்து வந்தவரான செல்வி பரமேஸ்வரி முன்னணிக் கலைஞர்களின் சமூகத்தில் சிறந்த கர்நாடக இசைக் கச்சேரியை நிகழ்த்தியிருந்தமை குறிப்பிடதத்தக்கதாகும். கர்நாடக இசைத்துறையில் சிறந்த ஆற்றுகையாளரான செல்வி பரமேஸ்வரி கணேசன் இசைத்துறையின் தலைவராக தெரிவுசெய்யப்பட்டுள்ளமை குறித்து இசை உலகைச் சேர்ந்த பலரும் தமது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து வருகின்றனர். கனடாவில் வாழும் அவரது அபிமானிகளும் அன்னாரின் பதவி உயர்வை முன்னிட்டு வாழ்த்துவதில் பெருமையடைகின்றார்கள்.

# யாழ் பல்கலைகழகத்தில் மாணவர்கள் முரண்பாடு காரணமாக துணைவேந்தர் சிறீசற்குணராசா தள்ளி வீழ்ந்தப்பட்டார்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டு மாணவர்கள் இடையே ஏற்பட்ட மோதல் உச்சக் கட்டத்தையடைந்த போது சமர முயற்யில் ஈடுபட்ட துணைவேந்தர் பேராசிரியர் எஸ். சிறீசற்குணராசா தள்ளி வீழ்ந்தப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை மாலை இடம்பெற்றது.

# சரணடைந்தவர்களை சுட்டுப்படுகொலை செய்தது எங்களுக்குத் தெரியும் என்றார் சிவாஜிலிங்கம்



இறுதி யுத்தத்தின் போது போர்க்குற்றம் நடந்தது என்பதை ஏற்றுக்கொண்ட பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகன் சிறுவர் படையணியின் தளபதி என கூறியதற்கு மன்னிப்புக் கேட்கவேண்டும் என வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம். கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார். ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றின்போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில், இலங்கை அரசாங்கத்தின் ஆட்சியாளர்களை சர்வதேச நீதிமன்றில் முற்படுத்துவதற்கும் அனைத்து தமிழ்த் தேசிய சக்திகளும் ஒன்றிணையவேண்டும் இறுதி யுத்தத்தின் போது பேர்க்குற்றம் நடந்தது என்பதை ஏற்றுக்கொண்டவர் பீல்ட் மார்சல் பொன்சேக்கா இது இவ்வாறு இருக்கும்போது போர்க்குற்றங்களையும் இனப்படுகொலைகளையும் மூடிமறைக்கின்ற பகிரத பிரயத்தனத்தில் இலங்கை அரசாங்கம் ஈடுபட்டு வருகின்றது. அதிலும் குறிப்பாக ராஜபக்‘க்கள் எல்லோருமே இதனை மூடி மறைப்பதற்கு பல முரண்பட்ட விடையங்களைத்தான் கூறிவருகின்றார்கள்.

இவ்வாறிருக்கையில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் பாராளுமன்றத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகன் பிஸ்கட் கொடுத்து படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார் என்ற கருத்துக்கு அன்றைய இராணுவத் தளபதியும் பீல்ட் மார்சல் பொன்சேக்கா தற்போது கூறியுள்ள கருத்துக்கள் தமிழ் மக்களை அதிர்ச்சிக்கும் வேதனைக்கும் உள்ளாக்கியுள்ளது.

12 வயது நிரம்பாத சிறுவனைப் பார்த்து சிறுவர்களின் படைத்தளபதி என்று கூறியுள்ளார். சாதாரணமாகவே 18 வயதுக்குட்பட்டவர்களை சிறுவர்கள் என்று அழைப்பார்கள் அவ்வாறான நிலையில் 12 வயது நிரம்பாத சிறுவனை சிறுவர் படைத்தளபதி என்று ஒரு இராணுவத்தளபதியாக இருந்தவர்தான் உலகத்தின் பீல்ட் மார்‘ல் ஆவார்.

காட்டுமிரண்டித்தனமான கோரமுகத்தைக் கொண்ட ஆட்சியாளர்களுக்கு முண்டுகொடுத்தவர்கள் இவர்கள் மீது போர்க்குற்றங்கள் இன அழிப்புக்களை தீவிரப்படுத்தாது நல்லாட்சி என்று கூறியவர்கள் தொடர்ச்சியாக மூன்று ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களை தவறாக வழிநடத்திய தமிழ்த்தலைவர்கள் என எமது மக்கள் விளங்கிக்கொண்டுள்ளனர்.

இன்றைய ஆட்சியாளர்களின் செயற்பாடுகள் மற்றும் கருத்துக்கள் மூலம் இதனை எமது மக்கள் விளங்கிக்கொள்கிறார்கள். 12 வயது சிறுவனை சிறுவர் படையணியின் தளபதி என்றால் மூன்று வயது ஐந்து வயது கொண்ட சிறுவர்களையும் சிறுவர் படைகள் இருந்தது என்று கூறுவீர்களா?

அது மட்டுமன்றி ெ'ல்வீச்சின் போதும் விமான குண்டு வீச்சின் போதும் சிதறிக்கொல்லப்பட்ட கற்பிணித் தாய்மார் மற்றும் குழந்தைகளை தாயின் கருவறையில் இருந்த படைகள் என்று கூறுவீர்களா? இவ்வாறான கதைகளைக் கூறுபவர்களை குறிப்பாக சிங்கள பௌத்த பேரினவாதிகளுக்கு சரியான பாடம் வழங்குவதற்கான நேரம் வந்துவிட்டது.

ஆகவே சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இலங்கை அரசாங்கத்தை நிறுவத்துவதற்கு தமிழ்த்தேசியத்தை நேசிக்கின்ற அத்தனை சக்திகளும் இப்போதே அணிதிரண்டு அந்தக் கோரிக்கைகளை ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் முன்வைத்து அதன் ஊடாக பாதுகாப்பு சபைக்கு பாரப்படுத்தி சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் முற்படுத்தவேண்டும்.

அதேவேளை எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்ற சஜித் பிரேமதாஸ சரத் பொன்சேக்காவை கட்டுப்படுத்த வேண்டும் அது மட்டுமன்றி அவர் கூறிய கருத்துக்கு மன்னிப்புக்கோர வேண்டும். ஒரு சிறுவனை பிஸ்கட் கொடுத்து கொலை செய்தது மட்டுமன்றி அந்த சிறுவனை சிறுவர் படையணியின் தளபதியாக கூறியது கொலையிலும் விட மோசமானது.

படையில் இருந்தவர்களுடன் நீங்கள் போராடினீர்கள் அதைவிட வெள்ளைக் கொடியுடன் சரணடைந்தவர்களை சுட்டுப்படுகொலை செய்ததும் எங்களுக்குத் தெரியும். அது மட்டுமன்றி அப்பாவிப் பொதுமக்களையும் கொன்றுவிட்டு அதை நியாயப்படுத்த முற்படுவது கொடுமையிலும் கொடுமை. சரத்பொன்சேக்கா போன்றவர்கள் தமிழ் பகுதிகளுக்கு வருவார்களானால் அவர்களுக்கு எதிராக போராடவேண்டும் மற்றவர்களுக்கு இது பாடமாக அமையும் என்றார்.



# காணாமல் போன மகனை தேடியமற்றுமொரு தமிழ்த் தாய் உயிரிழப்பு!

வவுனியாவில் காணாமல் போன தனது மகனைத் தேடி வந்த தாய் ஒருவர் சுகயீனம் காரணமாக மரணமடைந்துள்ளார். வவுனியா மகாறம்பைக்குளம் பகுதியை சேர்ந்த பெரியசாமி மனோன்மணி (வயது 70) என்பவரே நேற்றையதினம் மரணமடைந்துள்ளார்.

இவரது மகன் பெரியசாமி செல்வகுமார் (வயது 45) கடந்த 2008 ஆம் ஆண்டு வவுனியாவில் வைத்து காணாமல் ஆக்கப்பட்டிருந்தார்.

அவரைத்தேடி வவுனியாவில் 1328 நாட்களாக முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டத்திலும் குறித்த தாய் கலந்து கொண்டு தனது மகனை கண்டுபிடித்து தர போராடிய நிலையில் மகனை காணாமலேயே அவர் இன்று மரணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தமது பிள்ளைகளை தேடிய இரு தந்தைமார் வவுனியாவில் அண்மையில் மரணமடைந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனின் பதவி ஆசையால் கூட்டமைப்பு கூட்டத்தில் குழப்பம்!

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் பதவியிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் ஆபிரகாம் சுமந்திரன் விலகியுள்ளார். அதே வேளை தனது அணிசார்பில் பேச்சாளர் பதவிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனைப் பிரேரித்ததால் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

இன்று நடைபெற்ற கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் அடுத்த பேச்சாளர் தொடர்பாக முடிவெடுக்கப்படும் என ஏற்கனவே அறிவித்தபடியால் கூட்டத்தின் ஆரம்பித்திலேயே நாடாளுமன்ற உறுப்பினர் ஆபிரகாம் மதியாபரணம் சுமந்திரன் கூட்டமைப்பின் பேச்சாளர் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்து, கூட்டமைப்பின் பேச்சாளர் பதவிக்கு சிறிதரனை முன்மொழிவதாகத் தெரிவித்தார். அதே வேளை செல்வம் அடைக்கலநாதன் அவர்களே அடுத்த பேச்சாளர் பதவிக்கு தெரிவுசெய்யப்படவேண்டும் என மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தம் கருணாகரன்



தெரிவித்தார். செல்வம் அடைக்கலநாதன் அவர்கள் பேச்சாளராவதைத் தாம் எதிர்ப்பதாக சுமந்திரன், சிறீதரன், சாள்ஸ் நிர்மலநாதன், சாணக்கியன் ஆகியோர் தெரிவித்தனர்.

ஏற்கனவே தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் முடிவெடுத்தன் அடிப்படையில் செல்வம் அடைக்கலநாதனே கூட்டமைப்பின் பேச்சாளராக நியமிக்கப்படவேண்டும் என கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார். ஆயினும் சம்பந்தனின் கருத்தையும் அவமதித்து சுமந்திரன் அணி குழப்பத்தில் ஈடுபட்டதால் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# யாழ்ப்பாணம் புங்குடுதீவு, மக்கள் வெளியேறாதவாறுமுடக்கத்துக்குள்!



யாழ்ப்பாணம் புங்கடுதீவுப் பகுதி மக்கள் வெளியேறாதவாறு முடக்கப்பட்டுள்ளது. அத்துடன் அப்பகுதியில் வசிக்கும் மேலும் 385 இற்கும் மேற்பட்டோர் இன்று சுய தனிமைப்படுத்தப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் புங்குடுதீவு பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு கொ-ரோனா தொற்று இனங்காணப்பட்டதையடுத்து யாழ்ப்பாணம் புங்குடுதீவு பகுதியில் ஆயிரத்து 212 குடும்பங்களைச் சேர்ந்த மூவாயிரத்து 945இற்கும் மேற்பட்டோர் சுயதனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தார்கள்.

புங்குடுதீவுப் பகுதியில் ஊரடங்கு சட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. எனினும், புங்குடுதீவு பிரதேசத்தில் இருந்து யாரும் வெளியேறாதவாறும் அப்பிரதேசத்துக்குள் யாரும் செல்லாதவாறும் முடக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதிக்கு புங்குடுதீவு ஒன்றியம் மற்றும் நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய நிர்வாகத்தினரால் சமைத்த உணவுகள் பொதியிடப்பட்டு வழங்கப்படுகின்றன. அத்தோடு சர்வோதய நிறுவனத்தினால் குடிதண்ணீர் விநியோகிக்கப்படுகின்றது.

இதேவேளை, நெடுந்தீவு, நயினாதீவு மற்றும் ஏனைய தீவுகளுக்கான படகுப் போக்குவரத்துச் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இடம்பெற்று வருகின்றன.

காலை ஒரு சேவையும் மாலையில் ஒரு சேவையும் இடம்பெறுகின்றது. குறித்த சேவைக்கிணங்க யாழ்ப்பாணத்திற்கான பேருந்து சேவையும் இடம்பெறுகின்றது. குறிப்பாக தீவுப் பகுதிக்குள் தீவக முகவரி அடையாள அட்டையுடையவர்கள் மட்டும் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்கள் அத்தோடு, குறித்த ஆடைத் தொழிற்சாலையில் கடமையாற்றி கடந்த 30ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு சென்ற பெண் கலந்துகொண்ட பிறந்தநாள் நிகழ்வில் பங்குபற்றியவர்களுக்கும் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் இன்று 380இற்கும் மேற்பட்டோர் சுயதனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள்.

# யாழ் மாவட்டச் செயலாளர் அமைச்சர்கள் ஆகியோர் முகக் கவசமின்றி கலந்து கொண்ட யாழ் வைபவம்



யாழ்ப்பாண குட-ாநாடு எந்த நேரத்திலும் முடக்கப்படலாம் என்று, யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் க.மகேசன் தெரிவித்துள்ளார். ஆனால் கடந்த வாரம் யாழ்ப்பாண பல்கலைக் கழகம் மற்றும் கிளிநொச்சி ஆகிய இடங்களில் நடைபெற்ற சில அரச நிகழ்வுகளில் கூட யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மகேசன் மற்றும் அமைச்சர்கள் டக்ளஸ் தேவானந்தா, இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன், யாழ் மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவர் அங்கஜன் இராமநாதன் மற்றும் அரச அதிகாரிகள் யாழ்ப்பாண பல்கலைக் கழக உயர் அதிகாரிகள் ஆகியோர் எவருமே முகக்கவசம் இன்றி இங்கு உள்ள படங்களில் காணப்படுகின்றனர். இதே போன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்ற எந்தக் வைபவத்திலும் முகக்கவசங்கள் அணிந்திருப்பதை காணமுடியாமலே உள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆனால் யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெற்ற யாழ்ப்பாண மாவட்ட கொரோனா ஒழிப்பு செயலணிக் கூட்டத்தில், யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் க.மகேசன் யாழ்ப்பாண குடாநாடு எந்த நேரத்திலும் முடக்கப்படலாம் என்று தெரிவித்துள்ளார் இந்தக் கூட்டத்திலேயே இதுகுறித்த அறிவிப்பை வெளியிட்ட மாவட்டச் செயலாளர் க.மகேசன், இதனால், பொதுமக்களும், அதிக-ாரிகளும் அவசர நிலைக்கு தயாராக இருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.



இங்கு காணப்படும் படங்களில் அமைச்சர்கள் அதிகாரிகள் எவருமே முகக்கவசம் அணியாமல் இருப்பதைக் காணலாம்.

# வல்வெட்டித்துறை உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி அணிச் சின்னத்தில் "புலி" இருந்ததனால் படையினர் எதிர்ப்பு




வல்வெட்டித்துறையில் இடம்பெறும் வல்வை உதைபந்தாட்ட பிரிமியர் லீக் தொடரின் இன்றைய முதல் நாள் ஆரம்ப நிகழ்வில் அணி ஒன்றின் கொடியில் உறுமும் புலிகளின் சின்னம் இருந்தமையால் இராணுவத்தினரும் பொலிஸாரும் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

வல்வெட்டித்துறை ஊரணி மைதானத்தில் இந்த உதைபந்தாட்டத் தொடர் இன்று ஆரம்பமாகி இடம்பெறுகிறது.

அந்த சின்னம் பொறிக்கப்பட்ட கொடியை ஏற்றுவதற்கோ அல்லது காட்சிப்படுத்துவதற்கோ அனுமதிக்க முடியாது என்று பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

இந்தத் தொடரின் போது அந்தச் சின்னம் பயன்படுத்த முடியாது என்று கூறிவிட்டு இராணுவத்தினரும் பொலிஸாரும் மைதானத்திலிருந்து சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

# இலங்கை — தனிமைப்படுத்தல் மையத்தில் உயிரிழந்த பெண்ணுக்கு கொரோனா இல்லையாம்! உண்மையை மறைக்கின்றதா இலங்கை அரசு



யக்கலவிலிருந்து வெலிகந்த தனிமைப்படுத்தல் மையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டபோது உயிரிழந்த பெண்ணுக்கு கொரோனா தொற்று இல்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு உயிரிழந்த 68 வயதான பெண் மாரடைப்பால் உயிரிழந்தார் என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இராணுவ மருத்துவக் குழு விரைவாகச் செயற்பட்டதாகவும் குறித்த பெண் இருதயக் கோளாறு காரணமாக அவதிப்பட்ட நிலையிலேயே உயிரிழந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யக்கல பகுதியைச் சேர்ந்த குறித்த பெண்வெலிகந்த தனிமைப்படுத்தல் மையத்திற்கு நேற்று அழைத்துச் செல்லப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்தார். இவரது மகளுக்கு ஏற்கனவே கொரோனா தொற்று கண்டறியப்பட்ட நிலையில் இவருக்கும் வைரஸ் தொற்று இருக்கலாம் என சந்தேகிக்கப்பட்டது.

இந்நிலையில், இவருக்கு கொரோனா வைரஸ் தொற்று இல்லையென உறுதிசெய்யப்பட்டுள்ளது.

TRADITIONAL CHINESE
ACUPUNTRE THERAPY CENTRE

| எல்லாவிதமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| --- | --- |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி, | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி, | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடாய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine
Practitioners & Acupuncturists of Ontario. R.AC
D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

# நேற்று வியாழக்கிழமை கனடாவில் நடைபெற்ற 'இந்தியாவில் முதலிடுங்கள்' என்ற மாநாட்டில் இணையவழி மூலமாக உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி

### அவர் ஆற்றிய உரை கீழே ஆங்கிலத்தில் காணப்படுகின்றது

## Prime Minister's Keynote Address at the Invest India Conference in Canada



October 08, 2020

My dear friends,
Namaste!

First of all, I would like to compliment Shri Prem Watsa for creating this forum. It is good to see so many investors and businesses of Canada here. I am glad you are being exposed to the tremendous investment and business opportunities in India.

Friends,
There is one thing common to most people in the audience. It has people who take investment decisions.Decisions which assess risk. Decisions which predict return while making investment. I want to ask you: What do you think about before investing in any country? Does the country have vibrant Democracy? Does the country have political stability? Does the country have investment and business friendly policies? Does the country have transparency in governance? Does the country have a skilled talent pool? Does the country have a large market?

These are different questions, you maybe asking. The undisputed answer to all these questions is one and that is India. There is an opportunity for everyone - Institutional Investors, manufacturers, supporters of innovation ecosystems and infrastructure companies. There is an opportunity to invest, to set up units and to run businesses. There is an opportunity to partner with our private sector and with the governments. There is an opportunity to earn as well as learn not only that as well as to lead, there is an opportunity to grow.

Friends,
In the post-Covid world, you will often hear of various kinds of problems. Problems of manufacturing, problems of supply chains, problems of PPE, etc. Problems are natural. However, India has not let those problems be. We showed resilience and emerged as a land of solutions. We provided free food grain to 800 million people and free cooking gas to around 80 million families. And for a long time despite disrupted logistics, we are able to deliver money directly into bank accounts of more that 400 million farmers, women, poor and needy people within a matter of days. This shows the strength of governance structure and systems that we have built over the last few years.

Friends,
India is playing the role of the pharmacy to the world. We have provided medicine to around 150 countries so far during this pandemic. During March-June of this year, our agricultural exports rose by 23%. This happened while the entire country was in a stringent lockdown. Today, our manufacturing is running on full steam. Before the pandemic, India hardly manufactured PPE kits. Today not only does India manufacture millions of PPE kits every month, it also exports them. We are also committed to ramping up production. We want to help the entire world when it comes to vaccine production for Covid-19.

Friends,
The India story is strong today and stronger tomorrow. Let me explain how. Today, the FDI regime has been very well liberalized. We have created a friendly tax regime for Sovereign Wealth and Pension Funds. We have undertaken significant reforms for developing a robust Bond market. We have come up with Incentive schemes for Champion sectors.

Schemes in sectors like in Pharma, Medical Devices and Electronics Manufacturing have already been in operation.We want to ensure high-level attention and effectivehand-holding for investors.

For this, a dedicated Empowered Group of Secretaries has been made. We are proactively monetizing assets across sectors- Airports, Railways, Highways, Power Transmission lines so many. Real Estate Investment Trusts and Infrastructure Investment Trusts have been fully enabled for monetization of both public and private assets.

Friends,
Today, India is undergoing a rapid change in mindsets as well as markets. Today, India has embarked on a journey of deregulation and decriminalization of various offences under the companies act. India has risen from 81 to 48 in the Global Innovation Index rankings in the last 5 years. India has risen 142 to 63 in the World Bank's Ease of Doing Business rankings in the last 5 years. The results of these improvements are there for everyone to see.

India received around 70 Billion USD from Institutional Investors in a year and a half between January 2019 to July 2020. This is almost equal to that received in four years between 2013 and 2017. The continuing confidence of global investor community in India is seen by the fact that FDI into India went up by 20% in 2019. And this when global FDI inflows fell by 1%. India has already received over 20 Billion USD during the first 6 months of this year from across the globe. This is also the time when Covid-19 has been at peak globally. The International Financial Services Centre (IFSC) at GIFT City is one of our major initiatives. Investors could utilize it as a preferred platform to transact globally. We have recently set-up a fully empowered unified regulator for it.

Friends,
India has adopted a unique approach posed by the Covid-19 pandemic. We have given relief and stimulus package for the poor and the small businesses. But we have also used this opportunity to undertake structural reforms. These reforms ensure more productivity and prosperity. India has undertaken a trinity of reforms in the field of education, labour and agriculture. Together, they impact almost every Indian.

India has ensured reforms of old laws in the field of labour and agriculture. They ensure greater participation of the private sector while also strengthening the government's safety nets. These reforms will lead to a win-win situation for entrepreneurs as well as for our hard-working people. The reforms in the field of education/ will further harness the talent of our youth. These reforms have also set the stage for more foreign universities to be able to come to India. The reforms in the labour laws greatly reduce the number of Labour codes.

They are both employee and employer friendly and will further increase ease of doing businesses. The reforms in the field of agriculture are far-reaching. They will not only give more choice to farmers but will boost exports. These reforms will support our efforts to build an Aatmanirbhar Bharat or self reliant India. By working towards self-reliance, we seek to contribute to global good and prosperity.

Friends,
If you are looking to partner in the field of education, the place to be is India. If you are looking to invest in manufacturing or services, the place to be is India. If you are looking to collaborate in the field of agriculture, the place to be is India.

Friends,
India-Canada bilateral ties are driven by our shared democratic values and many common interests. The trade and investment linkages between us are integral to our multi-faceted relationship. Canada is the 20th largest foreign investor in India. More than 600 Canadian companies have presence in India. I am told that Canadian Pension Funds have pledged around 50 billion USD as investment in India till now. Our relationship is perhaps far stronger than what the numbers suggest.But that also means together, we can achieve much more.

Canada is home to some of the largest and most experienced infrastructure investors. Canadian Pension Funds were the first ones to start investing directly in India. Many of them have already discovered great opportunities in a range of areas like highways, airports, logistics, telecom and real estate. They are looking at expanding their presence and finding new areas to invest.

Mature Canadian investors who have been in India for many years now can be our best brand ambassadors. Their own experience, their plan to expand and diversify can be the most credible evidence for all of you to come here too.In addition, you have the benefit of knowing India well. After all, Canada has one of the largest Indian Diaspora in the world. There would be no barriers for you here. You would find yourself as welcome here as in your own country.

Thank you for inviting me to address this event.

New Delhi
October 08, 2020






# கனடிய பசுமைக் கட்சியின் தலைவராக ரொரன்ரோ சட்டத்தரணியான அன்னாமி போல் தெரிவானார்



கனடாவில் உள்ள தேசியக் கட்சிகளில் சிறிய கட்சியெனக் கருதப்படும் கனடிய பசுமைக் கட்சியின் (Green Party of Canada) புதிய தலைவராக ரொரன்ரோவைச் சேர்ந்த சட்டத்தரணியான அன்னாமி போல் தெரிவானார். நேற்று சனிக்கிழமையன்று நடைபெற்ற கட்சியின் புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்கும் வாக்கெடுப்பில் இவர் 12900 வாக்குகளைப் பெற்று தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்த வெற்றியின் மூலம் புதிய தலைவரான அன்னாமி போல் அவர்கள் ஒரு சாதனையை நிலைநாட்டியுள்ளார். கனடாவின் தேசியக் கட்சியொன்றின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட ஒரு கறுப்பினப் பெண்மணி என்னும் பெயரை இவர் நிலைநாட்டியுள்ளமையே இந்தச் சாதனையாகும்.

கனடிய பசுமைக் கட்சியானது (Green Party of Canada) ஒரு தேசியக் கட்சியானாலும் தற்போது அதற்கு ஒரு பாராளுமன்ற ஆசனமே உள்ளது. அந்த ஆசனத்திற்குரிய எலிசபெத் மே என்னும் பிரிட்டிஸ் கொலம்பியா மாகாணத்தைச் சேர்ந்த எம்.பியே கடந்த 13 வருடங்களாக பசுமைக் கட்சியின் தலைவராக சிறந்த முறையில் சேவையாற்றி வந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ஆனால் அவர் தலைமைப் பதவியிலிருந்து தாமாக விலகிக் கொண்டதால், புதிய தலைவரைத் தேர்தெடுக்கும் தேவை இந்தக் கட்சிக்கு ஏற்பட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கனடிய பசுமைக் கட்சிக்கு தற்போது உள்ள எண்ணிக்கைப் பலமான 35000 அங்கத்தவர்களில் 23877 அங்கத்தவர்களே இந்த தலைவர் தெரிவிற்கான வாக்கெடுப்பில் பங்குபற்றினார்கள். அவர்களில் 12090 வாக்குகளைப் பெற்று அன்னாமி போல் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவானார்.

வாக்கெடுப்பின் முடிவுகள் அறிவிக்கப்பட்டு தனது வெற்றி பற்றிய அறிவிப்பு வெளியானதும் அங்கு கூடியிருந்த கட்சி ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றியஅன்னாமி போல் பேசுகையில் ”நாம் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து இதற்கு முன்னர் செய்ய இயலாத ஒன்றை நிறைவேற்றியுள்ளோம். அடுத்து வரும் தேர்தலில் சிறிய கட்சியானாலும் பலமுள்ள ஒரு கட்சியாக தோற்றம் பெருவதற்கு நாம் ஒரு அத்திவாரத்தை இட்டுள்ளோம்.

தற்போதை நோய் பரவல் அச்சுறுத்தும் இந்த நேரத்தில் அரசியல்வாதிகள் செய்ய வேண்டிய காரியங்கள் பல உள்ளன. நாட்டுக்கும் தற்போதை இக்கட்டான நேரத்திற்கும் ஏற்றது போல பணியாற்றக் கூடிய அரசியல் தலைவர்களே எமக்குத் தேவை. ஆனால் என்னைப் பொறுத்தளவில் அண்மைய சிம்மாசனப் பிரசங்க உரையானது இந்த நாட்டு மக்களுக்கு எந்தவிதமான பலனையும் தரப்போவதாகத் தெரியவில்லை. அந்த உரையில் நோய் பரவலுக்கு எதிராக எடுக்கப்பட வேண்டிய திட்டங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை” என்றார் அன்னாமி போல்.

Canada
20 Years
Proudly serving Durham
Seniors Care Package FREE
Durham Tamil Association would like to thank the Government of Canada for providing the much needed Covid funding for our ongoing Seniors programs in Durham.
Durham Tamil Seniors Register here:
www.durhamtamils.org
905.428.7007
"Unity is Strength" "ஒற்றுமையே பலம்"

# கனடாவில் டுறம் தமிழ் ஒன்றியம் தமிழ் முதியோர்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள பெறுமதி வாய்ந்த பொதியினை வழங்குகின்றது

டுறம் வாழ் தமிழ் முதியோருக்கு டுறம் தமிழ் ஒன்றியம் வழங்கும் ஓர் அறிவித்தல்.
Covid தொற்று மீண்டும் அதிகாரித்து செல்வதால் அதிலிருந்த உங்களைப் பாதுகாத்துக்கொள்ள டுறம் தமிழ் ஒன்றியம் Senior Carepackage ஒன்றை வழங்கிக்கொண்டிருகிறார்கள். 50 முகக்கவசம் 100 கையுறைகள் 475ml sanitizer, toothpaste, toothbrush, sanitized wipes அடங்கிய பொதியினை இலவசமாக வழங்கிக்கொண்டிருகிறார்கள். நீங்கள் Pickering, Ajax, Whitby, Oshawa மற்றும் ஏனைய Durham பகுதியில் வசிக்கும் 55 வயதுக்கு மேற்பட்டவராக இருந்தால் டுறம் தமிழ் ஒன்றியத்திற்கு (905) 428-7007 இலக்கத்தில் அழைத்து பதிவு செய்து கொள்ளவும் அல்லது durhamtamils.com என்னும் இணையத்திலும் பதிவு செய்து கொள்ளுங்கள். உங்கள் பதிவுகளை October 20ம் திகதிக்கு முன்னர் செய்துள்ளவும். இதனை தொடர்ந்து Winter Care Package ஒன்று November மற்றும் December மாதங்களில் வழங்கப்படவுள்ளது. டுறம் தமிழ் ஒன்றியத்தில் நீங்கள் இணைவதின் மூலமாக அவர்களால் வழங்கப்படும் இலவச யோகா, தியானம், கலந்துரையாடல் மற்றும் பல பொழுது போக்கு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மனஅழுத்தத்தை குறைத்து கொள்ளுங்கள்.

காப்புறுதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் காப்புறுதி ஆலோசகர்களாவதற்கும் ஒரு நம்பிக்கையான நிறுவனம்
FREE CLASSES
To Become RESP & INSURANCE ADVISORS
LIFE • CRITICAL ILLNESS • HEALTH & DENTAL • MORTGAGE INSURANCE
• GROUP BENEFITS • RRSP • RESP
• DISABILITY INSURANCE • LONG TERM CARE
MEDICAL INSURANCE FOR SUPER VISA 100% REFUND IF VISA DENIED

Sritharan Thurairajah
Chartered Life Underwriter, Certified Health Insurance Specialist
Direct: 416.918.9771
Business: 416.321.2500
MDRT Member of Million Dollar Round Table
Life100 INSURANCE & INVESTMENTS INC.
- digi Media -
10 Milner Business Court, Suite 208, Scarborough, ON M1B 3C6
Web: www.life100.ca, E-mail: info@life100.ca
La Capitale
IA INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.
Assumption Life
BMO Insurance
Are you getting Million Dollar advice?

# பெரியாருக்கு மரியாதை செலுத்தினால் இடமாற்றமா? பதவிக்காகச் சுயமரியாதையை அடகுவைக்கும் அரசு: டிகேஎஸ் இளங்கோவன் விமர்சனம்



பெரியார் அரசியல் கட்சியின் தலைவர் அல்ல, தேசத்தந்தை எனப் போற்றப்படும் காந்தியடிகளைப் போல, தமிழ்நாட்டிற்கும் திராவிட இனத்திற்கும் பெரியார் பொதுவான தலைவர். அவருக்கு மரியாதை செலுத்தினால் தண்டனையா? பதவிக்காக சுயமரியாதையை தமிழக அரசு இழந்துள்ளது என டிகேஎஸ் இளங்கோவன் விமர்சித்துள்ளார்.

திமுக செய்தித்தொடர்புச் செயலாளர் டிகேஎஸ் இளங்கோவன் இன்று விடுத்துள்ள அறிக்கை:''தனது பகுத்தறிவு, சுயமரியாதை, சமூக நீதிப் பரப்புரைக்கு எதிராகக் கடலூரில் எந்த இடத்தில் பாம்பு, செருப்பு ஆகியவற்றை வீசி அவமானப்படுத்த நினைத்தார்களோ, அந்த இடத்திலேயே, தன் முன்னிலையிலேயே, தனது சிலைத் திறப்பு விழாவைக் கண்டு, தனது கொள்கையின் வெற்றியைத் தரணிக்குப் பறைசாற்றியவர் பெரியார்.கடலூர் கெடிலம் ஆறு, அண்ணா பாலத்தின் அருகே, மறைந்த திமுக தலைவர் கருணாநிதியால் திறந்து வைக்கப்பட்ட பெரியாரின் சிலை இன்றும் கம்பீரமாக நின்று பழம்பெரும் வரலாற்றைப் பார்ப்போர்க்கு எடுத்துரைக்கிறது. அதைக் காணும் இளைய சமுதாயத்தினர், தம் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் அயராது பாடுபட்ட மானுடகுலம் போற்றும் அந்த மாமனிதருக்கு மாலை அணிவித்து நன்றி செலுத்துவது வழக்கம்.கடந்த செப்டம்பர் 17 அன்று, பெரியார் சிலைக்கு, கடலூர் காவல் நிலையக் காவலர்களான ரங்கராஜ், ரஞ்சித், அசோக் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, அப்போது எடுக்கப்பட்ட படங்களை சமூக வலைதளத்தில் பதிவிட்டிருந்த நிலையில், நிர்வாகக் காரணங்களைக் காட்டி மூவரையும் விழுப்புரம் சரக டிஐஜியின் உத்தரவின்படி கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கு இடமாறுதல் செய்து உத்தரவு பிறப்பித்துள்ளார் கடலூர் மாவட்டக் காவல்துறை கண்காணிப்பாளர்.

பெரியார் சிலைக்கு மரியாதை செலுத்துவதும், நன்றி காட்டுவதும், காவல்துறைக்கு எந்த வகையில் நிர்வாகரீதியான இடையூறுகளை சிக்கல்களை ஏற்படுத்தியிருக்கிறது என்பது புரியாத புதிராக உள்ளது. மூன்று காவலர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேறெந்தக் குறிப்பிட்ட காரணங்களும் இல்லாத நிலையில், அவர்கள் மூவரையும் மட்டும் மாவட்டம் விட்டு மாவட்டம் இடமாறுதல் செய்ய வேண்டிய அவசியம் என்ன?ஒடுக்கப்பட்ட, அடக்கப்பட்ட சமுதாயத்து இளைஞர்கள் பெண்கள் உள்ளிட்ட அனைவரும் கல்வி கற்று, நல்ல வேலைவாய்ப்பினைப் பெற்று, சமூகத்தில் உயர்ந்த நிலை அடைந்திட வேண்டும் எனத் தன் வாழ்நாள் முழுவதும் போராடியவர் பெரியார். அவர் எண்ணிய நிலையை அடைந்த இளைஞர்கள் பெண்கள் உள்ளிட்டோர் அவருக்கு மரியாதை செலுத்துவது போலவே, காவலர்களும் நன்றி காட்டியுள்ளனர். இதில் காவல்துறைக்கு என்ன நிர்வாகப் பிரச்சினை ஏற்பட்டுவிட்டது?

பெரியார் அரசியல் கட்சியின் தலைவர் அல்ல, தேசத்தந்தை எனப் போற்றப்படும் காந்தியடிகளைப் போல, தமிழ்நாட்டிற்கும் திராவிட இனத்திற்கும் பெரியார் பொதுவான தலைவர். அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட அனைவருக்காகவும், எவ்வித பிரதிபலனும் எதிர்பாராமல், இறுதி மூச்சு வரை அயராமல் பாடுபட்ட அரிய தலைவர். அதனால் தான் அவர் மறைவெய்திய போது, முழுமையான அரசு மரியாதையுடன், அவரது இறுதி ஊர்வலம் நடைபெற ஆணை பிறப்பித்தார் நன்றியுணர்வு கொண்ட அன்றைய முதல்வர் தலைவர். தங்களுக்குப் பதவி கிடைக்கச் செய்தவர்களுக்கே நன்றி காட்டாத அதிமுக ஆட்சியாளர்களுக்கு, இந்த வரலாறு எங்கே நினைவிருக்கப் போகிறது? அதனால்தான், தந்தை பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து நன்றி செலுத்திய காவலர்களை மாவட்டம் விட்டு மாவட்டம் இடமாறுதல் செய்ய அனுமதித்திருக்கிறது காவல்துறைக்குப் பொறுப்பு வகிக்கும் முதல்வர் பழனிசாமி தலைமையிலான அரசு.தந்தை பெரியாரின் தத்துவங்களில் முதன்மையானது சுயமரியாதை. தந்தை பெரியாரின் கொள்கை வார்ப்புகளில் முதன்மையானவர் அண்ணா.

அந்த அண்ணாவின் பெயரைக் கட்சிக்கு 'லேபிளாக' வைத்துக் கொண்டு, பதவி சுகத்திற்காகவும், சொந்தப் பாதுகாப்புக்காகவும், சுயமரியாதையை அடமானம் வைத்து, பிழைப்பு நடத்தும் அதிமுக அரசு, தனது டெல்லி எஜமானர்களுக்குப் பாதம் தொட்டுச் சேவை செய்யும் வகையில், தமிழ்நாட்டில் பெரியார் சிலைகள் தொடர்ந்து அவமதிக்கப்படும் போக்கினை அனுமதித்து வருகிறது. பெரியார் சிலைக்கு நன்றி செலுத்திய காவலர்களை இடமாறுதல் செய்திருக்கிறது. நிர்வாகக் காரணங்கள் எனும் சொத்தை வாதத்தை முன்வைக்கும் நிர்வாகத் திறனற்ற அதிமுக அரசின் வெட்கக்கேடான செயலுக்கு கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இடமாறுதல் உத்தரவை உடனடியாகத் திரும்பப் பெற்று, மூன்று காவலர்களும் முன்பு பணியாற்றிய இடத்திலேயே பணி செய்திட அனுமதித்திட வலியுறுத்துகிறேன்''. இவ்வாறு டிகேஎஸ் இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

# சித்த மருத்துவம் மூலம் கரோனா நோயாளிகளின் நோய் எதிர்ப்பாற்றல் அதிகரித்துள்ளது: ஆராய்ச்சி முடிவில் தகவல்

நாட்றாம்பள்ளி சித்த மருத்துவ சிகிச்சை மையத்தில் கரோனாவால் பாதிக்கப் பட்டவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட சித்த மருத்துவம் சார்ந்த ஆராய்ச்சிகளின் முடிவுகளில் நோயாளிகளின் நோய் எதிர்ப்பாற்றல் அதிகரித்துள்ளதாக தற்போது முடிவுகள் வெளியாகியுள்ளன.திருப்பத்தூர் மாவட்டம், நாட்றாம்பள்ளி அக்ரகாரம் அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் கரோனா நோயாளிகள் சிகிச்சை பெற சித்த மருத்துவ சிறப்பு சிகிச்சை மையம் கடந்த ஜூலை மாதம் தொடங்கப்பட்டது. 60 படுக்கைகள் கொண்ட இந்த சிகிச்சை மையத்தில் இதுவரை 490 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில், 437 பேர் முழுமையாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். இங்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர்களில் ஒருவர் கூட இறப்பு இல்லை என்பது கூடுதல் சிறப்பாகும்.

திருப்பத்தூர் மாவட்டத்தில் இதுவரை 1 லட்சம் பேருக்குக் கரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதில் நேற்றைய நிலவரப்படி 5,495 பேர் நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் மாவட்டம் முழுவதும் பல்வேறு மையங்களில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தாலும், நாட்றாம்பள்ளி அரசு சித்த மருத்துவ சிறப்பு சிகிச்சை மையத்தில் அனுமதிக்கப்படும் நோயாளிகள் 7 நாட்களில் குணமடைந்து வீடு திரும்புவது அனைவராலும் பாராட்டப்பட்டு வருகிறது.இந்நிலையில், மத்திய மருத்துவ ஆராய்ச்சி மையத்தின் (CTRI) ஒப்புதலோடு நாட்றாம்பள்ளி சித்த மருத்துவ சிறப்பு சிகிச்சை மையத்தில் கரோனா வைரஸ் நோய்த்தொற்றுக்கு, சித்த மருத்துவம் சார்ந்த மருந்துகளின் ஆய்வுகள் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளன.

இதற்கான ஆய்வில் 20 கரோனா நோயாளிகள் கலந்து கொண்டனர். அதில், 19 பேர் 5 நாட்களில் முழுமையாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளது ஆய்வின் ஆதாரமாக உள்ளதாக சித்த மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து நாட்றாம்பள்ளி சித்த மருத்துவ சிறப்பு சிகிச்சை மையத்தின் ஒருங்கிணைப்பாளரும், முதன்மை சித்த மருத்துவருமான வி.விக்ரம்குமார் கூறியதாவது:"மாவட்ட ஆட்சியர் சிவன் அருள் அறிவுறுத்தலின் பேரில், மாவட்ட சித்த மருத்துவர் சுசி.கண்ணம்மா தீவிர முயற்சியால், நாட்றாம்பள்ளியில் சித்த மருத்துவ சிறப்பு சிகிச்சை மையம் கடந்த 4 மாதங்களுக்கு முன்பு தொடங்கப்பட்டது. இங்கு பாரம்பரிய முறைப்படி சிகிச்சை அளிக்கப்படுகிறது. நாகரிகம் என்ற பெயரில் நம் மரபுகளை நாம் கொஞ்சம், கொஞ்சமாக மறந்து வருகிறோம். நவீன தொழில்நுட்பத்துக்கு மாறுகிறோம் எனக் கூறிக்கொண்டு நம் அடையாளங்களைத் தொலைத்து வருகிறோம். அதை நாங்கள் மீண்டும் திருப்பி மக்களுக்குக் கற்றுக்கொடுக்க முயற்சி செய்து வருகிறோம்.நம் உடலுக்கும், மனத்துக்கும் ஆரோக்கியத்தை வழங்கக்கூடிய பாரம்பரிய உணவுகளை நம்மில் பல பேர் நினைத்துக்கூடப் பார்ப்பதில்லை. மக்கள் மறந்துபோன உணவு வகைகளை மீண்டும் காட்சிப்படுத்தி அதை நம் முன்னோர்கள் எப்படி சமைத்துச் சாப்பிட்டார்களோ அதைப்போலவே சமைத்துக் கொடுத்து, கரோனா போன்ற கொடிய வைரஸ் நோயில் இருந்து மீட்டெடுக்க முயற்சி செய்து வருகிறோம். அதற்கு நல்ல பலனும் கிடைத்துள்ளது. இங்கு அனுமதிக்கப்படும் நோயாளிகளுக்கு சித்த மருந்துகள் சாப்பிடுவதற்கு முன்பு ரத்த மாதிரிகள் எடுத்து பரிசோதனை செய்தோம். மருந்துகள் சாப்பிட்ட பிறகும் ரத்த மாதிரிகள் பரிசோதனை செய்து பார்த்தபோது மிகப்பெரிய மாற்றங்கள் கிடைத்துள்ளன. குறிப்பாக IL-6, LDH, D-Dimer, COVID Anti Body என்ற ரத்த மாதிரிகளின் முடிவுகள் சித்த மருந்துகளின் நம்பிக்கையை மேலும் அதிகரித்துள்ளது.

கரோனா நோய் காரணமாக ரத்தத்தில் அதிகரித்திருந்த பல விஷயங்கள் ஆய்வின் முடிவில் குறைந்திருப்பதைப் பார்க்க முடிகிறது.ரத்தத் தட்டணுக்களின் எண்ணிக்கையும், வெள்ளை ரத்த அணுக்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதைப் பார்க்க முடிகிறது. மேலும், இருமல், சளி, மூக்கடைப்பு, மணம் அறியாமை, சுவை அறியாமை, தொண்டைக்கரகரப்பு, வறட்டு இருமல் ஆகிய அறிகுறிகளுடன் அனுமதிக்கப்பட்ட நோயாளிகள் சித்த மருந்துகள் மூலம் படிப்படியாக குணமடைந்து பழைய நிலைக்குத் திரும்பி வருகின்றனர்.அதேபோல, சிறுநீரகம், கல்லீரல் சார்ந்த செயல்பாடுகளில் ஆய்வுக்கு முன்பும், பின்பும் மிகப்பெரிய மாற்றங்கள் இல்லை என்பதும் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

இதற்கிடையே, கரோனா வைரஸ் தொற்று பாதித்தவர்களிடம் இருந்து மேற்கொள்ளப்பட்ட சித்த மருத்துவம் சார்ந்த ஆராய்ச்சி முடிவுகளில் நோயாளிகளின் நோய் எதிர்ப்பாற்றல் அதிகரித்துள்ளதாக ஆய்வு முடிவுகள் தற்போது வெளியாகி மகிழ்ச்சியை அளித்துள்ளது.ரத்த மாதிரிகளின் முடிவுகள் சித்த மருத்துவம் சார்ந்த ஆராய்ச்சிகள் உலகைத் திரும்பிப் பார்க்கும் விதமாக அமைந்துள்ளது. இதற்கான ஆய்வறிக்கையை தற்போது தொடங்கியுள்ளோம். விரைவில் அறிவியல் தளத்தில் ஆராய்ச்சி முடிவுகள் பதிவு செய்யப்படும்". இவ்வாறு விக்ரம்குமார் தெரிவித்தார்.

# கர்நாடகாவில் உள்ள தமிழ்வழிப் பள்ளிகளில் தமிழாசிரியர் காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும்: கர்நாடக முதல்வருக்கு தமிழக முதல்வர் கடிதம்

கர்நாடகாவில் உள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் உள்ள தமிழாசிரியர் காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும் என கர்நாடக முதல்வரைத் தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பாக, முதல்வர் பழனிசாமி கர்நாடக முதல்வர் எடியூரப்பாவுக்கு எழுதிய கடிதம்:"கர்நாடகாவின் பல்வேறு மாவட்டங்களில் கடந்த பல ஆண்டுகளாக, தமிழ் மாணவர்களுக்குத் தமிழ் வழியில் கல்வி கற்க கர்நாடக அரசு, பள்ளிகளைத் தொடங்கி நடத்தி வருகின்றது. இத்தகைய தனியார் பள்ளிகளுக்கான ஒப்புதல் மற்றும் மானியம் ஆகியவற்றையும் கர்நாடக அரசு வழங்கி வருகின்றது.இந்நிலையில், கர்நாடகாவில் பல்வேறு அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் ஆசிரியர்களுக்கான காலிப் பணியிடங்கள் நிரப்பப்படவில்லை எனவும், தமிழ்வழியில் கல்வி கற்பதற்கான புதிய தனியார் பள்ளிகளைத் தொடங்க கர்நாடக அரசு ஒப்புதல் வழங்கவில்லை எனவும், கர்நாடகா தமிழ்ப் பள்ளி மற்றும் கல்லூரி ஆசிரியர்கள் சங்கத்தின் மூலம் தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.கர்நாடக மாநில வளர்ச்சிக்காக தமிழர்கள் முக்கியப் பங்காற்றி வருகின்றனர். முக்கியமாக, கோலார் தங்கச்சுரங்கம், ஹட்டி தங்கச்சுரங்கம், சந்தூர் மாங்கனீஸ் சுரங்கம், சிக்மகளூரு, மங்களூரு ஆகிய பகுதிகளில் உள்ள காபி எஸ்டேட்டுகளின் வளர்ச்சிக்காக முக்கியப் பங்காற்றியுள்ளனர். மேலும், கட்டிடத் தொழில்கள், விவசாயம் ஆகியவற்றிலும் முக்கியப் பங்காற்றியுள்ளனர். எனவே, இதுகுறித்து உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும். இவ்வாறு முதல்வர் பழனிசாமி தெரிவித்துள்ளார்.

# வேலையிழப்பானது எம்மை நொடிந்து போகச் செய்வதும் அடுத்து நாம் செய்ய வேண்டியதும்...



எமக்குள்ள கடன்கள் பற்றியும் consumer proposal அல்லது வங்குரோத்து நிலைக்குச் செல்லவேண்டும் என்றும் நினைப்பதற்கு முக்கிய காரணங்களில் ஒன்று நாம் வேலை இழப்பதாகும். நீங்கள் வேலை இழப்பதற்கு முன்பே, கடன் சுமைகள் இருப்பினும் அல்லது, கடன்வாங்கித்தான் செலவுகளைச் சமாளிக்க வேண்டும் என்ற நிலை வரும்போது, உங்கள் வேலை இழப்பானது, உங்களை கடனை மேலும் அதிகரித்து அவற்றை திருப்பிச் செலுத்த முடியாத நிலையையும் தோற்றுவிக்கும்.

எவ்வாறாயினும், ஏனைய விடயங்களுக்குள் போவதற்கு முன்னர், வேலை இழப்பிற்கான பொதுவான காரணங்களைப் பற்றி ஆராய்வோம்.

- வேலையாட்களை குறைத்தல் - இதற்குக் காரணம் மேற்படி நிறுவனங்கள் தங்கள் செயற்பாடுகளை சரியாக செய்யாதிருத்தல்
- குறைந்த செயற்பாட்டுத் திறன் - இந்த விடயம் தான் முதல் காரணமாக இருந்திருக்கும், ஏனென்றால், இறுதியில் உங்கள் தொழில் சார்ந்தது
- தவறான நடத்தது நீங்கள் உங்கள் தொழில் சம்பந்தமான சட்டங்களை மதிக்கத் தவறின் அடுத்த நிகழ்வது வேலை இழப்பது தான்

மேலும், சிலரது வேலை இழப்பிற்கு, இன்னும் சில பொதுவான காரணங்களை நாம் குறிப்பிடலாம். எனினும், ஒரு தடவை நீங்கள் இழப்பு பற்றி கவலைப்படும் போது, தொடர்ந்து மேலும் பல இடர்கள் தொடர்ந்தே வரும்.

வேலையை இழந்ததற்குப் பின்னர் உங்களை தாக்கும் மிகப்பெரிய விடயம் நீங்கள் நொடிந்து போவதுதான். அவ்வாறான நேரத்தில் தான் ஒரு தனி மனிதரோ அன்றி நிறுவனமோ, தாம் செலுத்த வேண்டிய பணத்தை செலுத்த முடியாமல் போவதுண்டு. ஒருவர் வேலை இழக்கின்றபோது, அவரது வழமையான வருமானத்திற்கு ஏற்படுகின்ற தடையானது, அவரை நொடிந்து போகச் செய்கின்றது.

தற்போது நீங்கள் செய்ய வேண்டியது என்ன?

நீங்கள் வேலை இழப்பது அல்லது நொடிந்து போவது ஒரு விடயம், ஆனால், அதிலிருந்து விடுபடுவது தொடர்பாக கவனம் செலுத்துவதுதான் முதல் செய்ய வேண்டியது ஆகும். அப்போது தான், நீங்கள் பட்ட கடன்களிலிருந்து மீண்டு வரமுடியும். கீழே உள்ள விடயங்கள் நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதைக் கூறுகின்றன.

மேலதிகமாக கடன்படுவதைத் தவிர்க்கவும்.

எந்த சந்தர்ப்பங்களிலும், நீங்கள் புதிய கடன்களை பெறக்கூடாது. உங்கள் தேவை-களைக் சமாளிப்பதற்காக சிறு சிறு வேலை-லகளைச் செய்யலாம். அதைவிடுத்து, பணத்தை கடனாகப் பெறுவதைத் தவிர்க்கவும். இவ்வாறு நடந்து கொண்டால், உங்கள் நிலைமையை மேலும் மோசமாக்கி, மேலும் நொடிந்து போகும் கஸ்டங்களுக்கு உள்ளாவீர்கள்.

உங்கள் சொத்துக்களை மதிப்பிடுங்கள்.

நிதி தொடர்பாகவும் மற்றும் வேலை இழந்தவர் என்ற வகையிலும், உங்கள் சொத்துக்களை மதிப்பீடு செய்து உங்கள் நிதி நிலைமையை கணித்துக் கொள்ள முடியும். உங்கள் சொத்துக்கள் தொடர்பான நல்ல விளக்கத்தைப் பெற்றுக்கொண்டு, அதன் மூலம் உங்கள் கடனை எவ்வாறு மீளச் செலுத்த முடியும் என்பதை பாருங்கள் உங்களுக்கு கடன் கொடுத்தவர்களோடு தொடர்பு கொள்ளுங்கள்.

இந்த நேரத்தில், உங்களுக்கு கடன் கொடுத்தவர்களோடு தொடர்பு கொள்ளுதல் எவ்வளவு முக்கியம் என்பதைப் பாருங்கள். அவர்களோடு தொடர்பு கொண்டு உங்கள் தற்போதைய நிலை குறித்து விபரியுங்கள். நீங்கள் உங்கள் நிதி நிலைமை மற்றும் உங்களிடம் உள்ள சொத்து தொடர்பாக எடுத்துச் சொல்லி, உங்களுக்கு உள்ள உடன்படிக்கை தொடர்பான மாற்றங்களைச் செய்யும்படி கேட்கலாம். இந்த வழியின் மூலம் நீங்கள் செலுத்த வேண்டிய கடன் தொகையின் வட்டி வீதத்தை குறைத்தோ அன்றி செலுத்த வேண்டிய கால எல்லையை நீடிக்கவோ முடியும்.

உங்களுக்கு ஏதாவது கடன் அல்லது கிறடிற் பிரச்சனை இருந்தால் தொடர்பு கொள்ளுங்கள் www.gtacredit.com என்னும் இணையத்தளத்தில் அல்லது அழையுங்கள் (416) 489-2000.



இந்திய செய்திகள்

# கொரோனா தொற்றால் இறந்தவர்களின் உடலை அடக்கம் செய்ய, ஓய்வு பெற்ற பேராசிரியர்கள் ரூ.25 ஆயிரம் நிதியுதவி



கோவிட்-19 நோய் தொற்றால் இறந்தவர்களின் உடல்களை நல்லடக்கம் செய்துவரும் தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழக மருத்துவ அணியைப் பாராட்டி உதவும் வகையில் இன்று ரூபாய் 25,000 இருபத்தி ஐந்தாயிரம் மதிப்புள்ள முககவசம், கையுறை மற்றும் கிருமி நாசினி ஆகியவை புதுக்கல்லூரி ஓய்வு பெற்ற ஆசிரியர் அமைப்புத் தலைவர் முனைவர் ஷேக் அலாவுதீன், பொருளாளர் முனைவர் ஷாஹீல் ஹமீது, பேராசிரியர் இக்பால், துணை முதல்வர் முனைவர் கமால் நாசர் முன்னிலையில் முதல்வர் முனைவர் பஷீர் அஹமது அவர்கள் த.மு.மு.க. மருத்துவ அணி தலைவர் கலீல் அஹமது மற்றும் T.M.M. ஷேக் தாவூத் அவர்களிடம் 05.10.2020 அன்று திங்கட்கிழமை காலை வழங்கப் பட்டது.

# 2021 ஆண்டுக்குள் 15 கோடி இந்தியர்கள் வறுமைக்குள் தள்ளப்படுவார்கள் என்கிறது உலக வங்கி



கொரோனா வைரஸ் காரணமாக 2021-ம் ஆண்டுக்குள் உலகளவில் 15 கோடி மக்கள் மோசமான வறுமையில் சிக்குவார்கள் என்று உலக வங்கி ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கொரோனாவுக்குப்பின் உலக நாடுகள் புதிய பொருளாதாரத்துக்கு தங்களை தயார்படுத்த வேண்டும், அதாவது, புதிய வர்த்தகம், துறைகளில் முதலீடுகள், தொழிலாளர்கள், திறன்கள், கண்டுபிடிப்புகளை அனுமதிக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது. உலகளவில் ஆட்டிப்படைக்கும் கொரோனா வைரஸ் பெருந்தொற்றால், இந்த ஆண்டுக்குள் 11.5 கோடி மக்கள் வறுமையில் சிக்குவார்கள் என கணித்திருந்தநிலையில் ஒட்டுமொத்தமாக 2021-ம் ஆண்டுக்குள் 15 கோடி மக்கள் மோசமான வறுமையின் பிடியில் வீழ்வார்கள். இருபது ஆண்டு வறுமை என்ற தலைப்பில் உலக வங்கி அறிக்கை வெளியிட்டது. அதில் இந்த விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. உலக வங்கி குழுமத்தின் தலைவர் டேவிட் மால்பாஸ் கூறியதாவது:

கொரோனா வைரஸ் பெருந்தொற்றாலும், உலகளவில் பொருளாதாரச் சரிவாலும், உலக மக்கள் தொகையில் 1.4 சதவீதம் பேர் மிகமோசமான வறுமையில் சிக்குவார்கள். 2020-ம் ஆண்டில் உலகின் வறுமை வீதம் 7.9 சதவீதமாக குறையும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அது அதிகரிக்கும். இந்த வளர்ச்சிப்பின்னடைவு மற்றும் வறுமை நிலையைக் குறைக்க, ஒவ்வொரு நாடும் கரோனாவுக்கு பின், வித்தியாசமான பொருளாதார அணுகுமுறையைக் கையாள வேண்டும். புதிய துறைகளுக்கு அனுமதி, வர்த்தகத்துக்கு அனுமதி, முதலீடு, தொழிலாளர், திறன் ஆகியவற்றுக்கு அனுமதி தர வேண்டும். புதிதாக வறுமையில் பாதிக்கப்படக்கூடியவர்கள் அனைவரும் ஏற்கெனவே அதிகமான வறுமை இருக்கும் நாடுககளைச் சேர்ந்தவர்களாக தான் பெரும்பாலும் இருப்பார்கள். நடுத்தர வருமானத்தைக் கொண்டிருக்கும் நாடுகளில் உள்ள மக்கள் இன்னும் மோசமான வறுமைக்குள் தள்ளப்படுவார்கள்.



இந்தியாவைப் பொறுத்தவரை இந்தியாவில் வறுமை குறித்த புள்ளிவிவரங்கள் முழுமையாக இல்லை என்பதால், உலகளாவிய வறுமையைக் கணக்கிடுவதில் சிக்கல் எழுகிறது. கடுமையான வறுமையில் உள்ள மிகப்பெரிய மக்களைக் கொண்ட இந்தியாவிடம் சமீபத்திய வறுமை குறித்த எந்தத் தகவலும் இல்லை. இதனால் உலகளாவிய வறுமையின் தற்போதைய மதிப்பீடுகளை மதிப்பீடு செய்வதில் நிச்சயமற்ற தன்மையை உண்டாகுகிறது. இவ்வாறு மால்பாஸ் தெரிவித்தார்.



# GWC
## Gibson Wellness Centre

**வாகன விபத்தில் கடுமையாக காயம் அடைந்தீர்களா?**

We specialize in serious and catastrophic injuries.

**உங்கள் காப்புறுதி நிறுவனத்திலிருந்து உங்களுக்கான தீர்வு கிடைக்கும் வரை**

# $100,000

**வரை வட்டியில்லாத கடனாக பெற்றுக்கொள்ள எங்களை அழையுங்கள்.**

CALL NOW TO RECEIVE UP TO
$100,000 IN INTEREST-FREE LOANS
to assist with your financial needs until you receive a settlement from your insurance company

If top-notch service is your wish, don't wait, call Thavem Krish



# டரன் கிருபா
கனேடிய தமிழ் சட்டத்தரணி

Darren Kirupa, J.D.
Barrister & Solicitor

**416.904.9118**

7130 WARDEN AVE, SUITE 606
MARKHAM, ON. L3R 1S2


Amma
Brand
இப்பொழுது கனடாவிலும்
கிடைக்கின்றது!


Amma
Apple Cider
with Mother Vinegar
LOOSE WEIGHT
HELPS IN :
WEIGHT MANAGEMENT
GLOWING SKIN
GOOD FOR HEART
BLOOD PRESSURE
URIC ACID
100% Natural
NOW IN CANADA
Amma
Apple Cider
with Mother Vinegar
Import and Deliver
AMMA FOOD INC.
647-832-5471


Premium Quality
Amma
Gingelly Oil
(Contains Permitted Anti-Oxidants)
சுத்தமான நல்லெண்ணெய்
NOW IN CANADA
Import and Deliver
AMMA FOOD INC. 647-832-5471
750ml
375ml


Amma
Herbal
Juices
NOW IN CANADA
Jamun with Karela Juice
Aloe Vera Juice
Karela Juice
Amla Juice
Super Energizer
Neem Leaf with Aloe Vera Juice
Body Pain Relax Juice
with Aloe Vera
Aloe Noni with Aloevera Juice
100% HERBAL
100% NATURAL
Import and Deliver
AMMA FOOD INC.
647-832-5471


SARAVANAA BHAVAN®
HSB CANADA
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
Fasting made Tempting
with Special Thali
for Purtassi
புரட்டாசி மாத விரதச் சாப்பாடு கிடைக்கும்
19 Sept | 26 Sept | 3 Oct | 10 Oct
saravanaacanada
@SaravanaaBhavanCanada
www.saravanabhavan.ca
Mississauga
Hurontario and Eglinton Intersection, 4559 Hurontario Street, Unit 12B, Mississauga, ON. L4Z3L9
T: 905 290 0769
Scarborough
Woodside Square, Finch & McCowan Intersection. 1571 Sandhurst Circle, Unit 153, Scarborough, ON. M1V 1V2
T: 416 293 7755

# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**

- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**

- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**




உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**



# PRECONSTRUCTION CONDOS & TOWNHOUSES!






**Bala Logendralingam**
REALTOR®

EXECUTIVE Award
100% Award

RE/MAX COMMUNITY
Realty Inc., Brokerage
Office: 416-287-2222

647-447-1562
info@balalogen.com
Suite 203 - 1265 Morningside Ave.
Toronto, ON M1B 3V9

### யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்:

# 20 ஆவது திருத்தமும் சிங்கள மக்களின் ஜனநாயகமும்

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் தமிழரசுக்கட்சி 20ஆவது திருத்தத்தை குறித்து ஓர் ஆய்வு அரங்கை ஒழுங்குபடுத்தியது. அதில் பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஒரு விடயத்தைக் கூறினார். அண்மையில் திருகோணமலைக்கு தான் சென்றிருந்த வேளை கடற்கரையில் உலாவச் சென்றதாகவும் அப்போது அங்கு வந்திருந்த சிங்கள உல்லாசப் பயணிகள் சிலர் தன்னை அடையாளம் கண்டு விட்டதாகவும் 20ஆவது திருத்தத்துக்கு எதிராக நீங்கள் சட்ட ரீதியாக போராட வேண்டும் என்று அவர்கள் தன்னை கேட்டுக் கொண்டதாகவும் கூறியுள்ளார். நீங்கள்தானே இந்த அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டு வந்தீர்கள் என்று தான் அந்த சிங்கள உல்லாசப் பயணிகளிடம் கேட்ட பொழுது அவர்கள் ஆம் கொண்டு வந்தோம் ஆனால் 20 ஆவது திருத்தத்தை கொண்டு வருவதற்காக நாங்கள் வாக்களிக்கவில்லை என்றும் கூறியுள்ளார்கள்.




இதில் இரண்டு விடயங்களைப் பார்க்கலாம். ஒன்று சுமந்திரனை போன்றவர்கள் எப்பொழுதும் தங்களுடைய ஜனநாயக உரிமைகளுக்காக போராடுவார்கள் என்று ஒரு பகுதி சிங்கள மக்கள் நம்புகிறார்கள் என்பதனை சுமந்திரன் தமிழ் மக்களுக்கு கூற முற்படுகிறார்.

இரண்டாவது 20 ஆவது திருத்தத்திற்கு எதிரான போராட்டம் எனப்படுவது ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கானது என்று காட்டப்படுகிறது.

முதலாவது சுமந்திரன் சிங்கள மக்களின் ஜனநாயக உரிமைகளுக்காக போராடுவார் என்ற நம்பிக்கை. சிங்களவர்களின் ஜனநாயக உரிமை் தமிழர்களின் ஜனநாயக உரிமை முஸ்லீம்களின் ஜனநாயக உரிமை என்று மூன்று ஜனநாயக உரிமைகள் இலங்கைத் தீவில் இருக்கின்றனவா? இந்த ஒவ்வொரு ஜனநாயக உரிமையும் மற்ற உரிமைக்கு எதிரானதா? ஜனநாயக உரிமைகளை இவ்வாறு இனத்துக்கு இனம் என்று பிரித்துப் பார்க்கலாமா?

இந்தக் கேள்விக்கு வரலாற்றில் விடை உண்டு. கொலனி ஆதிக்கத்தை முன்னெடுத்த மேற்கத்திய நாடுகள் தங்கள் தங்கள் நாடுகளில் வெள்ளைக்காரர்களுக்கு வழங்கிய அதே ஜனநாயக உரிமைகளை தமது காலனிகளில் வாழ்ந்த ஆசிய ஆப்பிரிக்க லத்தீன் அமெரிக்க மக்களுக்கு வழங்கியிருக்கவில்லை. எனவே சிங்கள மக்கள் அனுபவிக்கும் ஜனநாயக உரிமைகளை தமிழ் மக்களும் அனுபவிக்கிறார்கள் என்று கூறமுடியாது. முஸ்லிம் மக்களும் அனுபவிக்கலாம் என்று கூறமுடியாது.

ஆனால் 20ஆவது திருத்தத்தை பொருத்தவரை விவகாரம் இதைவிட ஆழமானது. அப்படி என்றால் இலங்கையின் ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கு 20 ஆவதை தடுத்து நிறுத்துவதோ அல்லது அதில் திருத்தங்களை மேற்கொள்வதோ மட்டும் போதாது. அதற்கும் அப்பால் இலங்கைத் தீவின் யாப்பினை பல்லின பல்சமயத் தன்மை மிக்கதாக கட்டியெழுப்ப வேண்டும்.

இலங்கைத் தீவில் சிங்கள தேசிய இனம் தமிழ்த் தேசிய இனம் முஸ்லிம் தேசிய இனம் மலையகத் தமிழ் தேசிய இனம் ஆகிய நான்கு தேசிய இனங்கள் உண்டு என்பதனை ஏற்றுக் கொண்டு அந்த அடிப்படையில் தேசிய இனங்களுக்கு இடையில் ஒரு கூட்டாட்சியை உருவாக்கும் புதிய யாப்பை கொண்டு வருவதன் மூலம் மட்டும்தான் இலங்கைத்தீவில் ஜனநாயகத்தை அதன் மெய்யான பொருளில் முழுமையாகக் கட்டி எழுப்பலாம். இல்லையென்றால் மார்க்சிஸ்டுகள் கூறுவதுபோல ஒடுக்கும் இனம் ஒரு காலமும் நிம்மதியாக இருக்க முடியாது.

இப்பொழுது 20ஆவது திருத்தத்தை பொறுத்தவரையிலும் அரசாங்கத்தின் மீது வைக்கப்படும் குற்றச்சாட்டு என்னவெனில் குடியாட்சி வழிமுறைகளுக்கு ஊடாக ஒரு முடியாட்சியை அவர்கள் ஏற்படுத்தப் பார்க்கிறார்கள் என்பதுதான். அதாவது ராஜபக்சக்கள் மன்னர்களாக மாறப் பார்க்கிறார்கள் என்பதுதான். ஆனால் ராஜபக்சக்கள் ஏன் மன்னர்களாக மாறப் பார்க்கிறார்கள் என்ற கேள்விக்கு விடைகள் முக்கியம்.

விடை ஒன்று - அவர்கள் வம்ச ஆட்சியை உருவாக்க விழைகிறார்கள். விடை இரண்டு - ராஜபக்சக்கள் போர்க் குற்றச்சாட்டுக்களில் இருந்து தங்களையும் படைத் தரப்பையும் பாதுகாத்துக் கொள்வதற்கு அவ்வாறான அதிகாரங்கள் தேவை என்று கருதுகிறார்கள். ஏனெனில் உலகில் யுத்த வெற்றி வாதமும் ஜனநாயகமும் ஒன்றாக இருந்தது கிடையாது. யுத்த வெற்றி வாதம் ஜனநாயகத்துக்கு இடம் விடாது. அப்படி இடம் விட்டால் யுத்த வெற்றிக்கு எதிராக தோற்கடிக்கப்பட்ட தரப்புக்கள் கிளர்ச்சி செய்வார்கள். யுத்தக் குற்றங்களுக்கு எதிராக நீதி கேட்பார்கள். உலக சமூகம் நிலைமாறுகால நீதி என்று சொல்லிக் கொண்டு நாட்டுக்குள் தலையிடும்.

எனவே போர்க் குற்றச்சாட்டுக்கு இலக்கானவர்களைப் பாதுகாப்பது என்று சொன்னால் அதற்கு ஒரே வழி நிறைவேற்று அதிகாரத்தை ஆகக் கூடிய பட்சம் தங்கள் கைகளுக்குள் குவித்துக் கொள்வது தான். இப்படி பார்த்தால் ராஜபக்ஷக்களுக்கு அதிகரித்த நிறைவேற்று அதிகாரம் தேவை. அதன் மூலம்தான் அவர்கள் தங்களையும் படைத் தரப்பையும் பாதுகாத்துக் கொள்ளலாம்.

மேலும், உலகில் பெரும்பாலான யுத்த வெற்றி வாதங்களுக்கு இல்லாத ஒரு தனித்துவமான அம்சம் இலங்கைத் தீவுக்கு உண்டு. அது என்னவெனில் இங்கே வம்ச ஆட்சியும் யுத்த வெற்றி வாதமும் ஒன்றாக காணப்படுவது. இவ்விரண்டு காரணங்களின் நிமித்தம் ராஜபக்ஷக்களுக்கு ஓர் அரசனுக்குரிய அதிகாரங்கள் தேவை. அதைத்தான் அவர்கள் 20 ஆவது திருத்தத்தின் மூலம் பெற்றுக் கொள்ளப் பார்க்கிறார்கள்.

எனவே இங்கு எதிர்க்கப்பட வேண்டியது 20ஆவது திருத்தம் என்பதற்கும் அப்பால் யுத்த வெற்றி வாதம் தான். யுத்த வெற்றி வாதம் எனப்படுவது யுத்த வெற்றியை முதலீடாக கொண்ட ஓர் அரசாட்சி. அது இலங்கைத் தீவைப் பொருத்தவரை இனவாதத்தின் 2009 ஆம் ஆண்டுக்குப் பிந்தைய வளர்ச்சி ஆகும். எனவே ராஜபக்சக்கள் தோற்கடிக்கப்பட்ட தரப்புக்கு வெற்றி என்று கருதத்தக்க ஒரு தீர்வை கொடுக்க மாட்டார்கள். அவ்வாறான ஒரு தீர்வை கொடுக்கும் விதத்தில் யாப்பை திருத்தவும் மாட்டார்கள் மாற்றவும் மாட்டார்கள்.

எனவே பல்லினத் தன்மை மிக்க பல்சமய தன்மை மிக்க ஒரு யாப்பைக் கட்டியெழுழுப்புவதற்கு யுத்த வெற்றி வாதத்தில் இடமில்லை. மாறாக யுத்த வெற்றி வாதத்தை பலப்படுத்துவதற்கு ஓர் அரசனுக்குரிய அதிகாரத்தைப் பெறும் யாப்புத் திருத்தமே தேவை. மேலும் ஒரு புதிய யாப்பைக் கொண்டு வருவது என்றால் அதற்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை மட்டும் போதாது. அதோடு சர்வஜன வாக்கெடுப்புக்கும் போக வேண்டும். அப்படிப்பட்ட சவால்களை எதிர்கொள்ள ராஜபக்சக்கள் தயாரா?

எனவே 20ஆவது திருத்தத்துக்கு எதிராக சட்டபூர்வமான சவால்களை ஏற்படுத்துவதை விடவும் அதைவிட ஆழமான பொருளில் ஒரு புதிய யாப்புக்கான கோரிக்கையை முன் வைப்பதே தமிழ் முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரை பொருத்தமானதாக இருக்கும். இலங்கைத் தீவின் யாப்பு ஒரு புனித நூல் அல்ல. இலங்கைத் தீவின் யாப்பு பாரம்பரியம் எனப்படுவது யாப்பை மீறும் ஒரு பாரம்பரியத்தையும் தன்னுள் கொண்டிருக்கிறது. கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக 13 ஆவது திருத்தத்தில் இருக்கும் காணி பொலிஸ் அதிகாரங்களை எந்த ஒரு ஜனாதிபதியும் மாகாண சபைகளுக்கு வழங்கவில்லை. இது ஒரு அப்பட்டமான யாப்பு மீறல் அதுபோலவே இப்போது நடைமுறையில் உள்ள 19 ஆவது திருத்தத்தின் படி ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சை தனது பொறுப்பில் வைத்திருக்க முடியாது. ஆனால் இப்பொழுது பாதுகாப்பு அமைச்சர் இல்லை. தனக்கு விசுவாசியான ஓர் ஓய்வு பெற்ற படைப் பிரதானியை அந்த அமைச்சின் செயலாளராக நியமித்து விட்டு கோட்டாபய மறைமுகமாக அந்த அமைச்சைக் கட்டுப்படுத்துகிறார். இதுவும் ஒரு யாப்பு மீறலே.

இவ்வாறாக இலங்கைத் தீவின் அரசியல் நாகரீகம் எனப்படுவது யாப்பை மீறும் சீரழிந்த பாரம்பரியத்தைக் கொண்டிருகிறது. இப்படி பார்த்தால் தமிழ் முஸ்லிம் மக்களும் சிங்கள முற்போக்கு சக்திகளும் இதுவிடயத்தில் ஒன்று திரண்டு ஒரு புதிய யாப்பை உருவாக்க கோரி நாட்டுக்கு உள்ளேயும் நாட்டுக்கு வெளியையும் போராடுவதுதான் பொருத்தமாயிருக்கும்.

ராஜபக்ச என்ற இரும்பு மனிதருக்கு தனிச் சிங்கள வாக்குகளால் வெற்றிகளை கொடுத்தோம் ஆனால் 20 ஆவது திருத்தத்தை கொண்டு வருவதற்காக அல்ல என்று கூறும் அக முரண்பாடு சிங்கள அரசியலில் எப்பொழுதும் உண்டு. யுத்த வெற்றி வாதத்துக்கு வாக்களித்து விட்டு ஜனநாயகம் வேண்டும் என்று கேட்பது ஒருவர் தான் நஞ்சை குடித்துவிட்டு மற்றவர்களைச் சாகுமாறு கேட்பதற்குபதற்கு ஒப்பானது.


## முக்கிய அறிவித்தல்

## பிரம்டன் தமிழ் முதியோர் கழக அங்கத்தவர்களுக்கு

BRAMPTON TAMIL SENIORS ASSOCIATION BTSA

COVID-19 தொற்று நோய் பரவல் காரணமாக மேற்படி கழகத்தினால் நடாத்தப்படும் அங்கத்தவர்களுக்கான பொதுக் கூட்டங்கள், வைத்திய கருத்தரங்குகள், ஆலோசனைகள், யோகாப் பயிற்சிகள், ஆங்கில வகுப்புகள், KEY BOARD வகுப்புகள் என்பன ZOOM மூலம் நடாத்த கழக நிர்வாகம் தீர்மானித்துள்ளது. அங்கத்தினர் அனைவரும் பங்குபற்றி பயனடையுமாறு வேண்டப்படுகின்றனர்.

ZOOM LINK I.D, PASSWORD என்பன அங்கத்தவர்களுக்கு அவரவர் ந.அயடை க்கு அனுப்பி வைக்கப்படும்.

**நிகழ்ச்சி விபரங்கள்:**

1) யோகாப் பயிற்சி பிரதி திங்கள் தோறும் காலை 10:00 மணி முதல் 11:00 மணி வரை.
2) பொதுக் கூட்டம் பிரதி திங்கள் தோறும் இரவு 8:00 மணி முதல் 10:00 மணி வரை.
3) Dr. நிஷாந்தனின் எலும்பு மூட்டு (Arthuritis) சம்பந்தமான சொற்பொழிவு 2020-10-15 வியாழன் இரவு 8:00 மணி முதல் 9:30 மணிவரை நடை பெறும்.
4) Dr. லக்ஷ்மி பிரபாவின் பொதுச் சுகாதாரம் மற்றும் நோய் எதிர்ப்பு ஆற்றல் சம்பந்தமான சொற்பொழிவு 2020-10-22 வியாழன் இரவு 8:00 மணி முதல் 9:30 மணி வரை நடை பெறும்.
5) ஆங்கில வகுப்புக்கள் நடைபெறும் நேரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ் வகுப்புகளில் கலந்து கொள்ள விரும்புவோர் தங்கள் பெயர் விபரங்களை Dr. ராதாகிருஷ்ணனிடம் பதிவு செய்து கொள்ளவும். தொலை பேசி எண் (416) 732-9094

நன்றி!

தலைவர்: திரு. டேவிட் ராஜரட்ணம்
(416) 458-3270

# கலை இலக்கிய நண்பர்கள் உட்பட சமூக ஆர்வலர்கள் அனைவராலும் நேசிக்கப்படும் சங்கர் நல்லதம்பி அவர்களின் பிறந்த நாள் வைபவம்






தந்தையின் பெயருக்கு ஏற்ப குண இயல்புகள் கொண்ட நண்பர் சங்கர் நல்லதம்பி அவர்களின் பிறந்த நாள் வைபவம் சில நாட்களுக்கு முன்னர் கனடாவின் ஸ்காபுறோவில் நடைபெற்றது.

அவருக்கு எத்தனை வயது என்று கேட்காமல், அவரை எத்தனையாவது வயது கடந்து சென்றது என்று என்னைக் கேட்டார்கள் நண்பர்கள் சிலர்.

"இந்த கொரோனாக் காலத்தில இது அவசியம் இல்லை" என்று கூறி அவர்களையும் சிரிக்க வைத்துவிட்டு, வைபவம் நடந்த இடத்திற்கு சென்று சிரித்தபடி வரவேற்ற நண்பர்கள் அனைவரோடும் கலந்துரையாடியும் உணவுண்டும் மகிழ்ந்தோம்.

பல மணி நேரங்கள் உற்சாகமாகவும் 'பாதுகாப்பாகவும்' கழிந்தன. தேவையான பரிசோதனைகள் செய்யப்பட்டும் முகக் கவசங்கள்அணிந்தும் அழைக்கப்பெற்ற அனைவரும் சங்கரைக் கொண்டாடி மகிழ்ந்தார்கள்

சங்கர் அவர்களுடைய வயது எத்தனை என்பது எனக்கு தெரியாது. ஆனால் அவர் இன்னும் 25 வருடங்களை நிச்சயமாக இப்போது இருக்கும் வர்த்தகப் பலம், வாலிபப் பலம், நட்புப் பலம், உதவிடும் உள்ளம் ஆகியவற்றோடு இந்த சமூக ஆர்வலர்கள் கலை இலக்கிய நண்பர்கள் ஆகியோர் சூழ்ந்திருக்க உதவிடும் உள்ளத்தோடு களித்திருப்பார் என்பது எனது நம்பிக்கை.

அந்த 25 வருடங்களுக்கு பின்னரும் அவர் பல ஆண்டுகள் மற்றவர்கள் வாழ்த்தி நிற்க, வாழ்ந்து பெரும் பேறுகளைப் பெறுவார் என்பதும் எனது நம்பிக்கை

ஒருவர் மற்றவர்களுக்கு உதவிகள் புரிவது தொடர்பாக பல பழமொழிகள் உண்டு. திருக்குறளில் கூட ஒரு தனி அத்தியாயம் உண்டு.

ஒருவர் தனது இடது கையால் கொடுத்தால் அது, கொடுத்தவரின் வலது கைக்கே தெரியக் கூடாது என்று கூறுவார்கள்.

ஆனால் மற்றவர்களுக்கு என்ன உதவி செய்தோம். அதன் பெறுமதி என்ன என்பதையெல்லாம் சங்கர் நல்லதம்பி கவனிப்பதே இல்லை.

கனடாவில் நடைபெறும் பல மேடை நிகழ்ச்சிகள் பெரும் இசை விழாக்கள் நடைபெறும் போது நண்பர் சங்கரும் 'பிசி' ஆகி விடுவார். விழாக்களை நடத்துகின்றவர்கள் அவரை 'பிசி' ஆக்கிவிடுவார்கள். அந்தளவிற்கு அந்த நிகழ்ச்சிகளோடு ஒன்றிப் போய்விடுவார் சங்கர்.

அவரது ஹோட்டல் அறைகள் விருந்தினர்களால் நிறையும். கலைஞர்கள் நடிக நடிகையர்கள் என அனைவரும் அவரது உபசரிப்பால் மகிழ்ச்சியில் திளைப்பார்கள். பல நிகழ்ச்சிகளுக்கு சங்கர் அவர்கள் ஒரு 'தூணாக' அல்ல பல தூண்களாக தாங்கி நிற்பார்.

இது அனைத்தும் புகழ்ச்சி வார்த்தைகள் அல்ல . நிஜமானவை.

எம்போன்ற நண்பர்களோடு வரும் சில கலை இலக்கிய நண்பர்கள், சங்கர் நல்லதம்பியிடம் உரையாடி மகிழ்ந்து, அவரோடு நட்புக் கொள்வார்கள். பின்னர் அவரது "குணம்' அறிந்து சங்கரிடம் உதவிகள் நாடிச் செல்வார்கள். சில வேளைகளில் நூல்களை பிரசுரம் செய்யும் செலவைக் கூட சங்கர் எற்றிருப்பார்.

இதை சங்கரும் எம்மிடம் சொல்ல மாட்டார். பெற்றவர்களும் சொல்லமாட்டார்கள். சில நாட்களுக்கு முன்னர் நடைபெற்ற அவரது பிறந்த நாள் நிகழ்வு போன்று வைபங்களின் பின்னர் அதை அறிந்து எம்மிடம் கேட்பார்கள்.

:நீங்கள் சங்கர் நல்லதம்பியின் வைபவத்திற்குச் சமூகமளித்தீர்கள் தானே. எனக்கு சொல்லியிருக்கலாம் தானே. எனக்கு 'கடமை இருக்கின்றது அவரை சென்று வாழ்த்துவதற்கு" என்பார்கள்.

அதற்கு பின்னர் தான் எமக்குத் தெரியவரும், சங்கர் நல்லதம்பி அவர்களிடம் சம்பந்தப்பட்டவர்கள் பெற்ற உதவிகள் தொடர்பாக.. சிலர் தாங்களாகவே பகிர்ந்து கொள்வார்கள்.

இவ்வாறாக பல விடயங்களை இலகுவாகவே பதிவு செய்யலாம். பல இடங்களில் நண்பர் சங்கர் நல்லதம்பியோடு நாம் சென்று சங்கமிக்கின்றபோது, அனைத்தும் திருப்தியோடு இடம்பெற்று அனைவருமே சந்தோசத்தை எட்டும் வகையில் அந்த இடம் காட்சி தரும்.

-------------

*முக்கிய குறிப்பு:-*

*இந்தப் பதிவில் படங்கள் உள்ள பகுதியில் காணப்படும் சற்று வேறுபட்ட படங்களில் எமது நண்பர் சங்கர் நல்லதம்பி நேரடியாக இல்லை. ஆனால் அந்த உதவிகள் வழங்கும் வைபவம் இடம்பெறுவதும் இந்த புகைப்படங்கள் எடுக்கப்பட்டதற்கு சங்கர் நல்லதம்பியே மூல காரணம். சில மாதங்களுக்கு முன்னர் தனது புதல்விகளின் பிறந்த நாளை முன்னிட்டு தமிழ் நாட்டில் உள்ள ஈழத்து அகதிகளுக்கு அவரால் வழங்கப்பட்ட உணவுப் பொதிகள் வழங்கப்பட்டதே இந்த படங்கள் சொல்லுகின்ற செய்தியாகும்.---------*

இங்கே காணப்படும் படங்கள் அனைத்தும் பல்வேறு நண்பர்களால் அன்றைய தினம் எடுக்கப்பெற்றவையாகும். அனைவருக்கும் நன்றி.

இன்னும் பல விடயங்கள் பதிவு செய்ய என் விரல்கள் எழுந்து நிற்கின்றன. ஆனாலும் இவ்வாறான இரங்கும் உள்ளத்தை கொண்ட சங்கர் நல்லதம்பி அவர்களையும் அவரது அழகியதும் இனியதுமான குடும்பத்தையும் நாம் ஒவ்வொருவரும் எமது இதயத்தால் வாழ்த்துவோம். அதுவே அனைத்தும் நிறைந்த போற்றுதலாகும்.

*நட்புடன்- அண்ணா-*



Preparation of Income Taxes
T1 and T2 with E/File
Location :
Unit 9- 40 Winges Road
Woodbridge, ON
L4L 6B2
Pearl Fortune Canada
Head Office
101 Laird Drive, Markham,
Ontario L3S 3N6
Office Number 905-554-5606
Fax Number 905-554-3236

Please contact:
Yo K Gamar ( C.M.A)
Cell : 416-917-7263
Accountant since 1993



உங்கள் பணத்தேவைகளுக்கு
குறைந்த வட்டிவீதத்தில் அடைவு பிடிக்கப்படும்

PAWN BROKERING
பழைய பவுண்கள் நியாயமான விலையில்
பெற்றுக்கொள்ளப்படும்
Cash Point
துரித பணமாற்றுச்சேவை
வெளிநாட்டு நாணயங்கள்
வாங்கவும் விற்கவும்.

Cash Point
3852 FINCH AVENUE EAST,. UNIT G30,
SCARBOROUGH, ON, M1T 3T9
TEL: 416-284-7000




# சத்தியன் வசனங்கள்

முகநூல் பக்கங்களில் சமூக ஈடுபாட்டோடு பங்கெடுக்கும் ஆயிரக்கணக்கானவர்களுக்கு நன்கு அறிமுகமான தோழர் பாலன் அவர்களது ஒரு முக்கியமான பதிவைப் பார்த்த போதுதான் சத்தியனுக்கு இந்த விரிவான பதிவை எழுத வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது.

1987ம் ஆண்டு இந்திய அமைதிப் படை என்ற பெயரோடு எமது தாயகப் பிரதேசங்களில் வந்திறங்கிய இந்திய இராணுவம், முதன் முதலாக பகிரங்கமாக அரங்கேற்றிய மோசனமான இராணுவ செயற்பாடு என்றால் இந்த 12 உயரிய போராளிகள் தங்கள் உன்னத உயிர்களை தாங்களே எடுக்கத் தீர்மானித்த "கொடுமையான" நடவடிக்கை எனலாம்.

அன்று பறிக்கப்பட்ட இந்த உயிர்கள் அனைத்தும் ஒரு அத்தியாயத்தை எழுதிவிட்டுப் போயின. அது என்னவென்றால் இந்திய சமாதானப் படையோ, அன்றி இந்திய அரசோ, அன்றி இந்திய அதிகாரிகளோ ஈழத்தமிழர்களுக்கு ஒரு குறைந்தபட்ச நிம்மதியைத் தானும் பெற்றுத் தரமாட்டார்கள் என்று இந்த சம்பவம் பற்றி தனியாக எழுதினாலே பக்கங்கள் நிறைந்து விடும். அதே நேரம் கோபக் கனல்கள் எம் ஒவ்வொருவரிடமிருந்தும் தெறித்துப் பறக்கும். அப்படியானால் மரணித்த போராளிகளின் படங்களோடு மேலதிகமாக நான்கு படங்களை சத்தியன் இணைத்திருக்கிறார் என்று வாசிப்பவர்கள் நினைக்கலாம்.

ஆமாம், நிச்சயமாக இந்த நால்வரும் ஈழத்து கவிதை உலகில் முக்கியமானவர்கள். அதோடு எமது விடுதலைப் போராட்டம், சமூகம் சார்ந்த போராட்டங்கள் ஆகியவற்றோடு தம்மை அர்ப்பணித்தவர்கள். அவர்களின் கவிஞர் காசி ஆனந்தன், புதுவை இரத்தினதுரை ஆகியோர் மக்கள் மத்தியின் நன்கு அறியப்பட்டவர்கள், மூன்றாமவர் கவிஞர் நல்லை அமிழ்தன் - புலேந்திரராஜா என்று இலக்கிய நண்பர்கள் நன்கு அறிந்த பெயர். நான்காமவர் கவிஞர் சுபத்திரன். மட்டக்களப்பில் இவரது மரணச் சடங்களில் கலந்து கொள்வதற்காக 1979 அல்லது 1980 இல், கல்முனையிலிருந்து பயணித்துச் சென்று பங்கெடுத்த நாள் இன்றும் ஞாபகத்தில் அழிக்க முடியாத ஓவியமாய் சத்தியனுக்கு கவிஞர் நல்லை அமிழ்தன் - புலேந்திரராஜா யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களில் கல்வித் திணைக்கள பிரதான அலுவலகங்களில் பணியாற்றியவர். வடக்கிலும் கிழக்கிலும் ஆசிரியர்களாக பணியாற்றிய நண்பர்களுக்க புலேந்திரராஜாவின் சேவையின் மகத்துவம் நன்கு தெரிந்திருக்கும்.






இவர்களில், கவிஞர் காசி ஆனந்தன் தவிர்ந்த ஏனைய மூவரோடும் சத்தியனுக்கு நெருக்கமான தொடர்புகள் இருந்தன. அதே போன்று இந்த நால்வருக்கும் ஈழத் தமிழர் விடுதலைப் போராட்டம் அல்லது தமிழர் தாயகத்தில் நாற்பது வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற சமூகம் சார்ந்த போராட்டங்களில் நிறையவே பங்குண்டு. இதற்காகவே இந்த நான்கு மேலதிக படங்கள் இங்கே காட்சியளிக்கின்றன. அவை பற்றி சில தகவல்களை குறிப்பிடும் போது வாசிப்பவர்களுக்கு அந்தந்த படங்களின் அவசியம் புரியும்.

எமது தாயகத்தில் நடைபெற்ற விடுதலைப் போராட்டங்கள் அதற்கு முன்னர் நடைபெற்ற சமூக அமைப்பு சார்ந்த போராட்டங்கள் ஆகியவற்றை நேரடியாகப் பார்த்தும் வாசித்தும் அறிந்து கொண்ட சத்தியன் இந்த பதிவின் மூலம் சில முக்கியமான விடயங்களைப் பகிர்ந்து கொள்ளவே நான்கு கவிஞர்களை சேர்த்துக் கொண்டுள்ளார்.

அதற்கு முன்பதாக, 1987 ஆண்டு இந்திய அமைதிப் படை என்ற பெயரில் எமது தாயக மண்ணுக்கு வந்த நாட்களில் சத்தியன் ஒரு அத்தியாவசிய சேவைகள் சார்ந்த ஒரு அரச உத்தியோகத்தராக இருந்தமையால் பல விடயங்களை அறிந்து கொள்ளவும் முடிந்தது. அந்த விடயங்களும் சில சமயம், இந்த பதிவின் இடையில் செருகப்படலாம்.

விடுதலைப் புலிகள் அமைப்பின் சில சிரேஸ்ட போராளித் தலைவர்களையும் பலி கொண்ட இந்த சம்பவம் அப்போது இலங்கையில் வாழ்ந்து கொண்டிருந்த எவருக்குமே எதிர்பார்த்திராத அதிர்ச்சியையே தந்திருக்க வேண்டும். சத்தியனுக்கும் அதே அனுபவம் தான்.

கோபம், வெறுப்பு, அச்சம், ஏமாற்றம் ஆகியவை கொண்ட அந்த கொடிதான உணர்வுகள் பலரை உள ரீதியாகவும் பாதித்திருந்தன. முக்கியமாக விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைமை மற்றும் போராளிகளைக் கூட உள ரீதியாகத் தாக்கியிருக்கத்தான் வேண்டும். அதனைத் தொடர்ந்து எமது மண்ணில் இடம்பெற்ற கொடிதான போர்க்கால அனுபவங்கள் எழுதினால் நீண்ட நெடும் நாவலாகத்தான் முடியும்.

முகநூல்களைப் பற்றி குறிப்பிடும் போது சத்தியனது நண்பர்கள் பல கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வார்கள். அவர்களில் ஒருவர் ஒரு நாள் சத்தியனிடம் உரையாடும் போது, "அண்ணர் இந்த பேஸ் புக் என்னைப் பொறுத்தளவில் ஒரு "பொதுக் கக்கூஸ்" என்றார். அதை சத்தியன் பூரணமாக ஏற்றுக் கொள்ளவில்லை. அது அவருடைய கருத்து. அவரது கருத்துக்கு ஆதாரமாக அவர் கூறியவற்றை இங்கு பதிவு செய்யவும் சத்தியன் இப்போது விரும்பவில்லை.

ஆனால் முகநூல் நண்பர் "தோழர் பாலன்" அவர்களது முகநூல் பக்கம் என்பது ஒரு பல ஆண்டுகளுக்குரிய "தகவல் பலகை" என்றே சத்தியன் கருதுவதுண்டு. சத்தியனிலும் பார்க்க இந்த கருத்தை "ஓகோ" என்று பாராட்டக் கூடிய நிரந்தர நண்பர்கள் முகநூலில் "தோழர் பாலன்" அவர்களுக்கு உள்ளார்கள் என்பதும் நிதர்சனம் சரி. இனி இந்த கவிஞர்கள் பக்கம் செல்வோம்.

கவிஞர்கள் புதுவை இரத்தினதுரை, கவிஞர் காசி ஆனந்தன் ஆகியோரில் யாரை முதலில் குறிப்பிட வேண்டும் என்ற சததியனின் கேள்விக்கு பதிலாக பதுவை இரத்தினதுரை அவர்களே முன்னால் வந்தார். அதற்கும் பல காரணங்கள் உள்ளன. கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்களது எழுதத் தொடங்கிய அதே நேரம் இடது சாரி அரசியல் கருத்துக்களைக் கேட்பதிலும் கற்பதிலும் ஆர்வம் கொணடிருந்தார்.

அவரது முதலாவது கவிதைத் தொகுதி "வானம் சிவக்கிறது" என்ற நூலின் வெளியிட்டு விழா சத்தியன் வாழ்ந்த, "புதுவை" அவர்கள் தொழில் செய்த திருநெல்வேலியில் நடைபெற்ற போது சத்தியனுக்கு வயது 12 ஆக இருந்திருக்க வேண்டும்.

சத்தியனுக்கே ஆச்சரியம் என்னவென்றால் அந்த கவிதைத் தொகுதியில் தனது அறிமுகக் கவிதையாக பிரசுரமாகியிருந்த வரிகள் இப்போதும் கூட சத்தியனுக்கு மனப்பாடம் அதில் "புதுவை" தனது எண்ணத்தையும் நோக்கையும் பினவருமாறு பதிவு செய்கின்றார் "பெற்ற தாய் எதிரே வந்து புரட்சியின் போது ஏதும் குற்றங்கள் செய்தால் எங்கள் குண்டுகள் அவளின் நெஞ்சை புற்றுகளாக்கும் ஆமாம்! புரட்சியின்போது நாங்கள் சுற்றமும் துணையும் பாரோம் சூடு காண் புலிகள் ஆவோம்" என்று இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது எதுவென்றால்.. தான் பின்னாளில் விடுதலை புலிகள் அமைப்போது இணைவதற்கு சுமார் இருபது வருடங்களுக்கு முன்பாக ஒரு "சிவப்புக்" கவிஞனாக "புலிகளைப் போலவே நாம் போரிடுவோம்" என்று கவிதை வரிகளில் குறிப்பிட்டுள்ளதை.

1971ம் ஆண்டின் நடுப்பகுதியில் கவிஞர் புதுவை இரத்தினதுரையோடு நெருங்கிப் பழகும் ஒரு "தம்பி" யாக சத்தியனுக்கு சந்தர்ப்பங்கள் கிடைத்ததற்கு பாலமாக விளங்கியது அப்போது பல கவிஞர்களை உருவாக்கிய "புதுக்கவிதை" என்னும் புதிய இலக்கிய வடிவம். தமிழ்நாட்டில் இயங்கிவந்த "வானம்பாடி" மாத இதழில் எம்போன்ற பலரின் கவிதைகள் பிரசுரமாகியிருந்தன. வானம்பாடிகள் காலத்தில் தான் மு.மேத்தா தமிழன்பன் போன்றவர்கள் எழுத்துலகிற்கு வந்தார்கள் என்பது ஒரு தகவலே.




மரபுக்கவிதைகளையே எழுதி வந்த புதுவை அவர்கள் நல்ல சந்தம் உள்ள புதுக்கவிதைகளையும் படைத்து சத்தியன், நல்லை அமிழ்தன் போன்ற கவிஞர்களையும் மேலும் அந்நாட்களில் கவிஞர்களாகத் தெரிந்த பலரையும் ஊக்குவித்து வந்தார். 1975ல் குமரனில் அவர் எழுதிய ஒரு கவிதை இன்றும் வரிக்கு வரி சத்தியனுக்கு மனப்பாடம்

"நாயக்க பரம்பரையை நாடாளவிட்டிருந்தோம்
வா அக்கா என்று ஒரு வனிதையும் ஆளவிட்டோம்
தந்தையாம் தனிப் பெரிய தலைவரையும் அனுப்பிவைத்தோம்
எந்தன் துயர் மாறியதா. இல்லை. இல்லை

இவ்வாறான புதுவையின் கவிதைகளை வாசித்து வாசித்து மகிழ்ந்து அவரைப் போல இல்லாவிட்டாலும் குறைந்தளவு சந்தக் கவிதைகளை ஓரளவு எழுத முடிந்தது சத்தியனால் அன்று.

1974ம் ஆண்டு சத்தியன் எழுதிய கவிதை எழுதிய கவிதைத் தொகுதி யாழ்ப்பாணம் பல் தொழில் நுட்பக் கல்லூரியின் பொறியியல் மாணவர் மன்றத்தினால் வெளியிடப்பட்ட போது அங்கு இடம்பெற்ற கவியரங்கிற்கு கவிஞர் "புதுவை" தலைமை தாங்கினார். இதில் கலந்து கொள்வதற்காகவே காலஞ் சென்ற கவிஞர் சில்லையூர் செல்வராஜன் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்தார் என்பதும் தென்னிலங்கைக் கவிஞர்களான திக்குவல்லை கமால் ஜவாத் மரைக்கார், அன்பு ஜவர்கசா அங்கு கவிதை வாசித்தார்கள் என்பதும் முக்கியமான தகவல்கள்.

இவ்வாறாக கவிதை எழுதுதல் படித்தல் போன்றவை கவிஞர் புதுவை அவர்களோடு பயணம் செய்யும் சந்தர்ப்பங்களை சத்தியனுக்கு ஏற்படுத்தித் தந்தன. அப்போது நண்பர் புலேந்திரராஜா திருகோணமலையில் கல்வித்திணைக்கள உத்தியோகத்தராக பணியாற்றினார். அங்கு இலக்கிய நண்பர்கள் ஏற்பாடு செய்யும் கவியரங்குகளுக்கு கவிஞரை அழைக்கும் போது அவர் என்னையும் அழைத்துச் செல்வார்.

பஸ்ஸில் தான் பயணம். தனது பஸ் பயணத்தின் போதே அவர் கவிதைகளை எழுதத் தொடங்கிடுவார்கள். அவரது அனுபவம் திறமை அவ்வாறு செய்ய சம்மதிக்கின்றன. பஸ் ஓடிக்கொண்டிருக்கும் போது குலுங்கிக் குலுங்கிச் செல்லுகின்றபோதும் "புதுவை"யின் பேனாவும் கொப்பித்தாளும் ஒட்டிக் கொண்டே இருக்கும். அவரது சிந்தனைகளும் தான. ஆனால் சத்தியன் அப்படியல்ல.. அவரது மாணவன் போல அவர் எழுதும் அழகை பார்த்து ரசித்துக் கொண்டிருப்பார்.

திருகோணமலை சென்றடைந்தவுடன் நல்லை அமிழ்தனின் அறையில் ஓய்வாக இருந்து சத்தியன் தனது கவிதை வரிகளை எழுதும் போது "புதுவை"யும் "நல்லை"யும் அரசியல் விடயங்களைப் பகிர்ந்து கொள்வார்கள். அப்போது அவர்கள் இருவரும் சீனச் சார்பு கொம்யூனிஸ்ட் படைப்பாளிகள். நல்லை அமிழ்தனுக்கு இன்னுமொரு வேலை. எங்கள் இருவருக்குமாக உணவு தயாரிப்பது.

திருகோணமலை சமூக சேவை மண்டபத்தில் கவிஞர்கள் இராஜ தர்மராஜா, திருமலை நவம் போன்ற கவிஞர்கள் சூழ்ந்திருக்க சத்தியன் தனது கன்னிக் கவிதகளை வாசித்து பாராட்டுக்களைப் பெறுவார் இவ்வாறு பல தடவைகள் பயணம். அதன் மூலம் பெற்ற நண்பர்கள். அனுபவம். கவிஞர் புதுவையின் சிறப்புக்கள் சிலவற்றை நல்லை அமிழ்தன் பற்றிய குறிப்பின் போது பகிர்ந்து கொள்ளலாம்.

அடுத்தவர் கவிஞர் காசி ஆனந்தன். உணர்ச்சிக் கவிஞர் என்ற பட்டமும் இவருக்கு உண்டு. இவரது பல கவிதைகளில் ஓரிரு கவிதைகளை சத்தியன் கவிதை இலக்கியம் பற்றிய உரைகளின் போது உதாரணமாக எடுத்து குறிப்பிடுவதுண்டு.

விடுதலைப் புலிகள் அமைப்பினர் ஆரம்ப நாட்களில் தமது இயக்கத்தின் போரட்ட நடவடிக்கைகளை அதிகரிக்கும் வகையில்பொருளாதார உதவிகளை வடக்கு கிழக்கு மக்களிடம் நேரடியாகக் கேட்டுப் பெற்றார்கள். சத்தியன் வீட்டுக்கு போராளிகள் வந்தபோது அவரது தாயார் தனது கைகளில் இருந்த ஒரு சோடிக்காப்பில் ஒன்றைக் கழற்றிக் கொடுத்த காட்சி அவருக்கு மட்டுமல்ல அயலவர்கள் சிலருக்கு கூட இன்னும் ஞாபகம் இருக்கலாம்.

இந்த "கரு" தொடர்பாக கவிஞர் காசி ஆனந்தன் எழுதிய கவிதை சத்தியனுக்கு நன்கு பிடிக்கும். ஏனென்றால் அந்தக் காட்சியை நேரடியாக அனுபவித்தவர் அல்லவா?

"தன்னிடம் பொருள் கேட்டு வந்த
போராளிகளிடம் கைகளிலிருந்த
காப்பைக் கழற்றிக் கொடுத்த
அந்த தாய் கூறினாள்
"உங்களில் பலருக்கு
கைகளே இல்லாமல் இருக்கும் போது
எனது கைகளுக்கு எதற்கு காப்பு"

இந்த கவிதையை சிறந்ததும் எளிமையான கவிதை வரிகள் எப்படி அமையலாம் என்பதற்கு உதாரணமாக சத்தியன் மேடைகளில் குறிப்பிடுவதுண்டு இவ்வாறு கவிஞர் காசி ஆனந்தனின் கவிதைகள் பாடல்கள் ஆகியன எப்போதும் அழியாதவை.

ஆனால் இந்த பதிவில் காசி ஆனந்தன் பற்றிய குறிப்பு எழுதுவதற்கு முக்கியமான விடயம் எதுவென்றால், அதுவும் ஒரு கவிதை வரிகள் தான்.

--------------

"ஆண்ட பரம்பரை மீண்டும் ஒரு முறை
ஆள நினைப்பதில் என்ன குறை"

------------

என்ற திருக்குறள் போன்ற இரண்டு வரிகள் எமது தாயக மககள் அனைவரையும் நன்கு கவர்ந்தவை ஆனால் பலர் நினைத்துக்கொண்டிருக்கின்றார்கள் இந்த வரிகள் விடுதலைப் புலிகளின் போராட்டத்தை தட்டிக்கொடுப்பதற்காகத் தான் கவிஞர் காசி ஆனந்தன் எழுதினார் என்று. ஆனால் உண்மை அதுவல்ல.

சத்தியனைப் போலவே ஆயிரக் கணக்கானவர்களுக்கு நன்கு தெரியும் இந்த வரிகள் தமிழர் விடுதலைக் கூட்டணி என்னும் பாராளுமன்ற அரசியல் நோக்கம் கொண்ட கட்சிக்காகவே எழுதப்பட்டது என்று 1976ம் ஆண்டில் அலலது சிறிது முன்னரோ அன்றி பின்னரோ வந்த நாட்களில், ஆர்வமுள்ள நண்பர்களோடு அமிர்தலிங்கம் அவர்கள் உரையாற்றிய பல கூட்டங்களுக்கு சத்தியன் செல்வதுண்டு. ஒரு தடவை யாழ்ப்பாணம் பிளவுஸ் சந்தியில் தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் இந்த வரிகளை மிகவும் அழுத்தமாகவும் அழகாகவும் மேடையில் உரக்க உச்சரித்தது சத்தியனுக்கும் உணர்வை ஏற்படுத்தியிருந்தது.

ஆனால் இத்தனை ஆயிரம் உரமான உறுதியான அழகிய விடுதலைப் பாடல்களை உருவாக்கிய விடுதலைப் புலிகள் அமைப்பின் கலைப் பண்பாட்டுக் கழகம் கவிஞர் காசி ஆனந்தனின் இந்த இரண்டு வரிகளையும் எந்த சந்தர்ப்பங்களிலும் இணைக்கவில்லை. இது சத்தியனது கருத்து. ஆனால் இதில் ஏதாவது தவறிருந்தால் யாராவது சுட்டிக்காட்டலாம்.

சத்தியனது ஆதங்கம் எதுவென்றால் ஒரு பாராளுமன்றத் தேர்தல் பிரச்சாரங்களுக்கு இந்த வரிகளில் உள்ள "வீச்சு" அவசியமா என்பது தான். பல ஆண்டுகளாக பாராளுமன்ற அரசியல் மூலம் ஏமாற்றப்பட்ட தமிழ் மக்கள் மத்தியில் கவிஞர் காசி ஆனந்தனின் இந்த வரிகளை தொடர்ந்தும் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் பயன்படுத்தும் போதும் உண்டான ஒரு ஏமாற்றமே இந்தக் கருத்தை பதிவு செய்வதற்கு காரணமாக அமைகின்றது இந்த வரிகள் தொடர்பாகவும் கவிஞர் காசி ஆனந்தன் தொடர்பாகவும் இன்னும் எஞ்சியிருக்கின்ற கவிஞர்கள் நல்லை அமிழ்தன் , சமூக எழுச்சிக் கவிஞர் சுபத்திரன் தொடர்பாகவும் அடுத்தவாரமும் பல முக்கியமான செய்திகள் சம்பவங்கள் ஆகியன தொடரும்.

*சத்தியன் வசனங்கள் என்னும் தொடரை வாரா வாரம் எமது முகநூலிலும் உதயன் பத்திரிகையிலும் "www.uthayannews.ca" "www.nanban.ca" என்னும் இணையத்தளங்களிலும் பார்க்கலாம். மீண்டும் அடுத்த வாரம் சந்திப்போம்!*


Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற
கனகாம்பிகை
தங்கநகை அடகுமாடம்
KANAGAAMBIKAI
PAWN BROKERS
25
வருடங்கள்
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
கனகாம்பிகை
பவுண் வங்கி
தங்கம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...
2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2
416 269 7198

- மொன்றியால் வீணைமைந்தன் எழுதுகின்றார்

# #16 சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும்

"ஆடுதல், பாடுதல் சித்திரம் கவி
யாதி யினைய கலைகளில் - உள்ளம்
ஈடுபட் டென்றும் நடப்பவர் - பிறர்
ஈன நிலைகண்டு துள்ளுவார் - அவர்
நாடும் பொருள்கள் அனைத்தையும் - சில
நாளினில் எய்தப் பெறுவார் - அவர்
காடு புதரில் வளரினும் - தெய்வக்
காவனம் என்பதைப் போற்றலாம். "

**- அமரகவி பாரதி**



நடிகர் திலகம் அவர்களின் ஆரம்பகால கலை வாழ்வு நாடக கம்பெனிகளிலேயே ஆரம்பமாயிற்று என்பது பலருக்கும் தெரிந்த சங்கதியாகும். சிவாஜி அவர்களுடைய நாடகப் பள்ளியாக மதுரை ஸ்ரீபால கான சபா - புகழ்பெற்று விளங்கியது. அதன் உரிமையாளர் யதார்த்தம் பொன்னுசாமிப் பிள்ளை மிகவும் கண்டிப்பானவராகும். ஆனால் அந்த நாடக சபாவின் ஆசிரியர் பெயரும் பொன்னுசாமி ஆகும். இருவர் பெயரையும் வித்தியாசப்படுத்தும் வகையில் முதலாளியை பெரிய பொன்னுசாமி என்றும், ஆசி-ரியரை சின்ன பொண்ணு சாமி படையாட்சி என்றும் அழைப்பார்கள்.

"என்னுடைய வாத்தியார் முதன் முதலில் எனக்கு கற்றுக்கொடுத்தது என்ன வே'ம் தெரியுமா? ராமாயண நாடகத்தில் சீதா வேடம். "யாரென இந்தப் புருசனை அறிகிலேன்" என்கிற பாட்டு, "அதை நான் பாடி, அதற்கு தகுந்தார்போல் நடனமாடி, பேசி சிரித்து நடக்க வேண்டும். ஆசிரியர் நினைத்தபடியும், சொல்லித்தந்த படியும் சிறப்பாக செய்ததினால் என் வாத்தியார் முதுகில் தட்டிக் கொடுத்து "மிகவும் நன்றாக நடித்தாய்" என்றார்.



கலையில் நன்றாக வரவேண்டும் என்ற வெறி பிடித்தவன், கலையை வைத்து வாழ்க்கையில் முன்னேற வேண்டும் நமது அப்பா அம்மாவிற்கு எல்லாம் சோறு போட வேண்டும் என்று நினைத்தவன் முதன் முதலில் ஒரு வே'ம் போட்டு, அது நன்றாகவிருக்கிறது என்று கூறிய உடன் எவ்வளவு மகிழ்ச்சி அடைந்திருப்பேன். சிந்தித்துப் பாருங்கள். அதன் பின் படிப்படியாக வே'ங்கள் உயர்ந்தன. உண்மையிலேயே சொல்கிறேன், "என்னுடைய நாடக வளர்ச்சி போல யாருக்குமே அமைந்திருக்காது" என தனது சுயசரிதையில் கூறியுள்ளார் சிவாஜி அவர்கள்.



"நாடகம் தாய்- சினிமா சேய்" என்பார்கள். ஆனால் சிவாஜி அவர்களுக்கு நாடகம் தாய் சினிமா தாரமாகும்" அப்படிப்பட்ட நாடகக்கலையை ஆரம்ப காலத்தில் சமூகம் மதிக்கவில்லை. 19ம் நூற்றாண்டின் இறுதிக்காலம் வரை கட்டுப்பாடும் தரமும் அற்ற முறையில் தான் நாடகமேடை இருந்தது. ஆனால் மிகத் திறமைவாய்ந்த கலைஞர்கள் பலர் பெரும் புகழும் செல்வாக்கும் வருவாயும் பெற்றிருந்தார்களாகையால், ஒவ்வொருவரும் தங்களையே முக்கியஸ்தர்களாகக் கொண்டு தனித்தனியே நாடகக் குழுக்கள் அமைத்து இயங்கி வந்தனர். செல்வமும் செல்வாக்கும் அளவுக்கதிகமாகப் பெருகியதன் காரணமாக இக்கலைஞர்களில் பலர் தீய பழக்க வழக்கங்களில் ஈடுபட்டு சமுதாயத்தின் நல்லோர்களால் வெறுத்தும், இழித்தும் ஒதுக்கப்பட்டனர். இவர்களை மக்கள் "கூத்தாடிகள்" என்று அருவெறுப்பு கொண்டு பழித்தனர்.

கலைஞர்களின் வாழ்க்கையின் நியதியாய் நிலைத்து விட்ட இத்தகைய இழிவையும் பழியையும் துடைக்கவும் தூய்மைப்படுத்தவும் ஒழுக்கமுடையவர்களாக உயர்த்தவும் களங்கத்தைப் போக்கவும் முன்வந்த நாடகப் பெரியவர்களான பம்மல் சம்பந்த முதலியார், து. தா சங்கரதாஸ் சுவாமிகள், மயிலை எம். கந்தசாமி முதலியார், நவாப் ராஜமாணிக்கம் பிள்ளை, டிகேஎஸ் சகோதரர்கள், எம் கே ராதா, கே எஸ் அனந்த நாராயண ஐயர், சதாவதானம் கிருஸ்ணசாமிப் பாவலர், உடுமலை முத்துசாமிக் கவிராயர் போன்ற நடிக பெருமக்களும், நாடகாசிரிய பேரறிஞர்களும் நாடக நிறுவனத் தலைவர்களும் தங்கள் வாழ்நாள் எல்லாம் பாடுபட்டு ஓரளவு வெற்றியும் கண்டனர்.

இவ்வாறு "கூத்தாடிகள்" என்று இழித்துப் பேசப்பட்ட நாடக சமூகத்தைப் பெருமைப்படுத்திய கைங்கரியத்தை உழைப்பின் காரணமாக "கூத்தாடிகள்" என்று இழி பெயர் நீங்கி, □கலைஞர்கள்□ என்ற அந்தஸ்தைப் பெற முடிந்தது. கலைஞர்கள் அரசியலில் பங்கு பெறவும் அமைச்சர் பதவிகளில் அமரும் தகுதி உள்ளவர்கள் என்ற பெருமையைத் தேடித் தந்த பெரியோர்களின் சேவையை மறுப்பதோ நன்றியுள்ள செயலாகாது.

1977 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 1,2,3 ஆகிய தேதிகளில் சென்னைப் பல்கலைக்கழக அரங்கில் முத்தமிழ் கலாவித்துவ ரத்தினம்" டாக்டர் அவ்வை சண்முகம் நாடகப் பேராசிரியர் "பம்மல் சம்பந்த முதலியார்" இருவரினதும் பெயரால் ஏற்படுத்தப்பட்ட அறக்கட்டளைச் சொற்பொழிவாக கவிஞர் கு சா கிரு'ணமூர்த்தி அவர்கள் ஆற்றிய "தமிழ் நாடக வரலாறு" சொற்பொழிவிலிருந்து சில செய்திகளை மேலே பதிவு செய்துள்ளேன்.

யதார்த்தம் (மதுரை) பொன்னுசாமி நாடகக் கம்பெனியில் குருகுலவாசம் மேற்கொண்டு வந்த சிவாஜி அவர்கள், அதே கம்பெனி "மங்கள கான சபா" "என் எஸ் கே நாடக சபா" என்றெல்லாம் பெயர் மாற்றம் கொண்டபோதும் நடித்து வந்தார். அக்காலத்தில் நாடகக் கலைஞர்கள் சூழ்நிலை காரணமாக கம்பெனிகளில் நிரந்தரமாக இருப்பதில்லை பிரிந்து போவார்கள் அல்லது புது கம்பெனிகள் ஆரம்பிப்பார்கள். இப்படியாக நடிப்பிசைப் புலவர் கே ஆர் ராமசாமி அவர்கள் கம்பெனியில் சில மாதங்கள் இருந்து விட்டு அண்ணா அவர்களின் சிபாரிசின் பேரில் சக்தி நாடக சபாவில் இணைந்தார். நாடகக் கலையில் அவருக்கிருந்த தணிக்க முடியாத ஆவல் மீண்டும் அவரை சிறந்த நடிகராக்கியது. சக்தி நாடக

(தொடர்ச்சி 20ம் பக்கம்)



# இவ்வார ராசிபலன்

**09-10-2020 வெள்ளி தொடக்கம் 15-10-2020 வியாழன் வரையும்**




**மேஷம்:** துணிவோடு செயல்பட்டு துன்பங்களை துரத்தியடிக்கக் கூடிய வாரம். பொறாமை விலகும். குதுகலம் சேரும். வருமானம் வரும். கல்வி ஆர்வம் கூடும். கட்டிடத் தொழில் லாபம் தரும். பதவி வாய்ப்பு வரும். பிள்ளைகளால் தொல்லை உண்டு. பூமி லாபம் உண்டு. தான தர்மங்கள் பலன் தரும். பணவரவு உயரும். பொருளாதாரம் உயரும். மங்கள செய்தி வரும். முயற்சிகள் பலன்தரும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும்.
*வழிபடவேண்டிய தெய்வம்: தீர்த்தபாலீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 2,4,6,8*
*அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* V,U




**ரிஷபம்:** மென்மையான பேச்சுக்களால் மேன்மைகளை சந்திக்கக்கூடிய வாரம். குதுகலம் தாண்டவமாடும். ஸ்திர சொத்து சேரும். தெய்வீக ஈடுபாடு வெளிப்படும். கணவன் மனைவி ஒற்றுமை கூடும். ஆபரணச் சேர்க்கை உண்டு. பயணம் அனுகூலம் தரும். பணவரவு உண்டு. பங்கு சந்தை லாபம் தரும். முயற்சிகள் பலன் தரும். வெறுப்புகள் அகலும், சிறப்புகள் சேரும். தாய் நலனில் கவனம் தேவை. நிதி பற்றாக்குறை நீங்கும். உடல் சோர்வு ஏற்படும். கல்வி ஈடுபாடு கூடும்.
*வழிபடவேண்டிய தெய்வம்: காரணீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 7,3,5,2*
*அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* B,T




**மிதுனம்:** சிக்கனத்தைப் கடைப்பிடித்து செல்வத்தை கைப்பிடிக்க வேண்டிய அற்புதமான வாரம். நிதி நிலமை சீராகும். முயற்சிகள் வெற்றி தரும். நற்காரியங்களில் ஈடுபடுவீர். உறவினர்களால் அனுகூலம் உண்டு. அரசு வகையில் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் விருத்தி ஏற்படும். புதிய வாய்ப்பு தேடி வரும். மாணவர் பாராட்டு பெறுவர். சந்தோஷம் பெருகும். ஆபரணச் சேர்க்கை உண்டு. விரும்பிய பொருள் சேரும். வாழ்வில் வளம் உண்டு.
*வழிபடவேண்டிய தெய்வம்: விஸ்வரூப ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 0,9,3,6*
*அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* E,Z




**கடகம்:** நலமும் வளமும் நாடி வரக்கூடிய நன்மையான வாரம். பணப்பற்றாக்குறை நீங்கும். உத்யோகத்தில் உயர்வு ஏற்படும். பாராட்டு பெருகும். உணவு பிரியம் அதிகமாகும். ஆதலால் கவனம் தேவை. நண்பரால் செலவு உண்டு. உறவுகளால் நன்மை உண்டு. பிரியமானவர்களை சந்திப்பீர்கள். குடும்ப பாசம் அதிகரிக்கும். இடமாற்றம் ஏற்படும். உலோகத் தொழில் உயர்வு தரும். கல்விச் செலவு உண்டு.வளமான சிந்தனை உருவாகும்.
*வழிபடவேண்டிய தெய்வம்: உலகளந்த பெருமாள், அதிர்ஷ்ட எண். 3,1,2,9*
*அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* Y,G




**சிம்மம்:** சகாயமான சூழ்நிலைகளும் சந்தோஷமான நிகழ்வுகளும் அமையக்கூடிய வாரம். மற்றவரால் பாராட்ட படுவீர்கள். அறிவாற்றல் பளிச்சிடும். உடல் நலம் சீராகும். புதிய பதவிகள் கிட்டும். பித்தளைத் தொழில் லாபம் தரும். பிரார்த்தனை நிறைவேறும். எதிர்ப்புகள் அடங்கும். தந்தையால் நலம் பெருகும். மாணவர் திறமை பளிச்சிடும். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. வீடு, மனை யோகம் உண்டு. தன்னம்பிக்கை கூடும்.
*வழிபடவேண்டிய தெய்வம்: ஏகாம்பரேஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 6,5,7,0*
*அதிர்ஷ்ட நிறம்: பொன் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* F,T




**கன்னி:** யோகமும், தியாகமும் கலந்த திருப்தியான வாரம். அலைச்சல் அதிகரிக்கும். பூர்வீக சொத்து வந்து சேரும். கடன் சுமை குறையும். ரியல் எஸ்டேட் லாபம் தரும். கணவன் மனைவி கருத்து வேறுபாடு அகலும். உடன் பிறந்தவரால் சலசலப்பு ஏற்படும். உடல் நலனில் கவனம் தேவை. பிரச்சனைகள் குறையும். நிதி நிலமை சீராகும். வெளியூர் பயணம் ஏற்படும். நல்லோர் நட்பு கிட்டும்.
*வழிபடவேண்டிய தெய்வம்: கோயமுத்தூர் ஸ்ரீகோணியம்மன்,*
*அதிர்ஷ்ட எண்: 7,1,9,0, அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா,*
*அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* W,K




**துலாம்:** திட்டமிட்ட காரியத்தில் வெற்றி கிடைக்கக் கூடிய அற்புதமான வாரம். திட்டங்கள் வெற்றி பெறும். உழைப்புகள் கடுமையாக இருக்கும். குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். உறவினர் வருகை உற்சாகம் தரும். வணிகத் தொழில் விரிவடையும். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். நட்பு வட்டம் விரிவடையும் சுபச் செய்தி வந்து சேரும்.கனவுகள் நினைவாகும். சுற்றுலா செல்லும் வாய்ப்பு உண்டு. திருஷ்டிகள் விலகும்.
*வழிபடவேண்டிய தெய்வம்: ஸ்ரீபுரம் ஸ்ரீ லட்சுமி நாராயணீ,*
*அதிர்ஷ்ட எண்: 8,3,0,2, அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர்,*
*அதிர்ஷ்ட எழுத்துக்கள்.* L,A




**விருச்சிகம்:** அனுகூலமும், ஆதாயமும் கிடைக்கக் கூடிய அற்புதமான வாரம். சந்தோஷம் அதிகரிக்கும். எதிரிகளின் தொல்லைகள் குறையும். பயணங்களால் வெகுமதி கூடும். பணத் தேவைகள் அதிகரிக்கும். தொழிலில் கவனம் தேவை. தொலைப்பேசி தகவல் தெந்தரவு ஏற்படுத்தும். புண்ணியஸ்தளங்களுக்கு செல்வீர்கள். நீண்ட நாள் முயற்சிகள் பலன் தரும். முன்னோர்கள் ஆசிர்வாதம் கிடைக்கும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். வாகனத்தால் செலவு ஏற்படும்.
*வழிபடவேண்டிய தெய்வம்: ஜெகநாதப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 6,0,2,3*
*அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* P,C




**தனுசு:** பொன்னும், பொருளும் பூமியும் வாகனமும் வாங்கி சேர்க்கக்கூடிய வகையான வாரம். மதிநுட்பத்தோடு செயல்பட வேண்டும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். போதாத காலம் விலகும். தோதான எண்ணங்கள் உருவாகும். பொருளாதாரம் உயரும். வியாபாரம் திருப்தி தரும். நண்பர்களின் பேச்சு ஆறுதல் தரும். குழப்பங்கள் நீங்கும். மன நிலையில் மாற்றம் ஏற்படும். அடுத்தவர் தலையீடு அமைதியை கொடுக்கும். வம்பு தும்புகள் தேடி வரும். நிதானத்தை கடைப்பிடிப்பது நல்லது.
*வழிபடவேண்டிய தெய்வம்: புதுக்கோட்டை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன்*
*அதிர்ஷ்ட எண்: 5,1,9,2, அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு,*
*அதிர்ஷ்ட எழுத்துக்கள்,* R,E




**மகரம்:** வகையான வாழ்வும், மிகையான வரவும் முறையாகக் கிடைக்கக் கூடிய வாரம். தங்க நகைகள் சேரும். கூட்டுத் தொழிலில் கவனம் தேவை. பொருள் இழப்பு ஏற்படும். சகோதரியால் அனுகூலம் உண்டு. ஆபரணச் சேர்க்கை உண்டு. கலைத்துறையில் திருப்பம் உண்டு. மாணவர்கள் கவனம் தேவை. கடன் சுமை அதிகரிக்கும். காரியத்தடை ஏற்படும். உறவினர்களால் நன்மை உண்டு. எதிரிகளால் தொல்லை உண்டாகும்.
*வழிபடவேண்டிய தெய்வம்: அபிராமேஷ்வரர், அதிர்ஷ்ட எண்: 2,1,0,8*
*அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* R,D




**கும்பம்:** உதவியும் பதவியும் கிடைக்கக்கூடிய உன்னதமான வாரம். பணியில் உயர்வு உண்டு. புதிய பதவிகள் கிட்டும். உடல் நலம் சீராகும். மற்றவரால் பாராட்டுப்படுவீர்கள். பயணத்தால் அனுகூலம் உண்டு. குடும்ப அன்யோன்யம் கூடும். பொறுப்புகள் கூடும். பொருள் வரவு திருப்தி தரும். இடமாற்றம் நன்மை தரும்.
*வழிபடவேண்டிய தெய்வம்: லலிதா செல்வாம்பிகை,*
*அதிர்ஷ்ட எண்: 1,2,6,9, அதிர்ஷ்ட நிறம்: நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* X,N




**மீனம்:** பொருளாதாரத்தில் சிறப்பும், வாழ்வாதாரத்தில் பொறுப்பும் சேரக்கூடிய வாரம். குதூகலப் பயணம் உண்டு. நிதி நிறுவனம் லாபம் தரும். தொழில் உற்பத்தி அதிகரிக்கும். இனிக்கும் சம்பவம் அமையும். விவசாய விளைச்சல் அதிகரிக்கும். தொழில் நிம்மதி கொடுக்கும். ஆலய வழிபாடு ஆறுதல் தரும் பெண்களுக்கு யோகம் கூடும். நல்வர் நட்பு உருவாகும். தோல்வி நிலை மாறும் கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும்.
*வழிபடவேண்டிய தெய்வம்: சொர்ணபுரீ'வரர், அதிர்ஷ்ட எண்: 7,4,6,9,*
*அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* G,C


ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377

(19ம் பக்கத் தொடர்ச்சி)

## சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும்

சபையின் "விதி" என்னும் நாடகத்தில் வில்லன் "விமலாக" நடித்தார். வில்லன் பாத்திரத்தில் ஒருவன் திறம்பட நடித்து விட்டால் மற்ற பாத்திரங்களில் நடிப்பது சுலபம் என்பது சிவாஜியின் கருத்தாகும். இவ்வாறாக ரசிகர்களின் பாராட்டுதலைப் பெற்று அடுத்து "கவியின் கனவு" "சிற்பியின் காதல்" பங்கஜம் எனும் பெண் பாத்திரம் தாங்கி நகைச்சுவை நடிகரானார். "பயங்கரி" நாடகத்தில் "வைத்தி" எனும் நகைச்சுவை வேடம். தொடர்ந்து "தசரதன்" வீர வல்லவன் வேடம், "நூர்ஜகான்" வேடத்தில் அவரை மிஞ்ச ஆள் கிடையாது. சக்தி நாடக சபையில் சிவாஜி அவர்கள் கடைசியாக "என் தங்கை"யின் நடித்தார். அதன்பின் சக்தியில் இருந்து வெளியேறிய பலர் "தேவி நாடக சபா"வை ஆரம்பித்தனர்.

சிவாஜியைப் பொருத்தவரை நாடகமும் சினிமாவும் இரு கண்களாகும். சினிமாவில் மிக உயர்ந்த நிலைக்கு வந்து சுமார் 18 மணி நேரம் ஓய்வு ஒழிச்சலின்றி தினமும் நடித்துக் கொண்டிருந்த காலத்தில் நாடகத்திற்கு திகதி வாங்குவது மிகவும் க'டம். அப்படி திகதி வாங்கிவிட்டால் "சிவாஜி நாடக மன்றக்" கலைஞர்கள் மிகவும் மகிழ்ச்சியடைவார்கள் காரணம் அதனால் அவர்களுக்கு கிடைக்கும் வருமானம். ஆனால் சிவாஜிக்கோ படப்பிடிப்பு பாதிப்பும், வருமான இழப்பும் ஏற்படும். சினிமாவில் சம்பாதிப்பதை நாடகத்தில் விடுவது அவரது வழக்கம். "சிவாஜி பிலிம்ஸ்" போன்று "சிவாஜி நாடக மன்றம்" தன்னோடு கூட நடித்த நாடகக்களைஞர்களுக்காக அவர்களின் வாழ்வாதாரத்திற்காக ஏற்படுத்தப்பட்ட மன்றம் ஆகும். பின்னாளில் சினிமா படமாகத் தயாரிக்கப்பட்ட நாடகங்களான "வியட்நாம் வீடு" "ஞான ஒளி" "தங்கப்பதக்கம்" ஆகிய நாடகங்கள் எங்களது இளமை காலத்தில் புகழ்பெற்ற நாடகங்களாகும். "சிவாஜி நாடக மன்றம்" தமிழகமெங்கிலும் - பம்பாய் உட்பட பல தடவை மேடையேற்றி புகழடைந்த வரலாறு படைத்த நாடகம் "வீரபாண்டிய கட்டபொம்மன்" ஆகும். சிவாஜி ஐயா நாடக உலகிற்கு ஆற்றிய செவ்விய பணியை தனியாக ஒரு புத்தகமாகவே எழுதலாம். மக்கள் திலகம், எஸ். எஸ் ராஜேந்திரன், ஆர் எஸ் மனோகர், டி கே எஸ் சகோதரர்கள்- வரிசையில் "சோ", கே. பாலச்சந்தர், வை.ஜி மகேந்திரன், எஸ்.வி சேகர், எஸ்.வி சகஸ்கரநாமம் போன்ற நடிகர்களும், கலைஞர்களும் நாடக உலகிற்கு ஆற்றிய பணி மறக்கக்கூடாத மாபெரும் பணியாகும். ஒரு நாடக நடிகனுக்கு வாழ்க்கையில் என்னென்ன இக்கட்டான சூழ்நிலைகள் ஏற்படுகிறது என்பதை மையக்கருத்தாக கொண்டு நமது மண்ணின் கலைஞர் வி சி குகநாதன் அவர்கள் நடிகர் திலகத்துக்காக எழுதிய கதையே "இராஜபார்ட் ரங்கதுரை" படத்தில் சிவாஜி அவர்கள் "கொடிகாத்த திருப்பூர் குமரன்" "வீரன் பகத்சிங்" ஆங்கிலப்புலவர் 'ேக்ஸ்பியரின் "ஹாம்லெட்" ஆகிய பாத்திரங்களில் தோன்றி நடித்ததை மெய்சிலிர்க்கப் பார்த்து இரசித்தூள்ளோம். நாடக மேடையில் நடிப்பதென்பதும், கமெராவுக்கு முன் நடிப்பது என்பதும் வெவ்வேறு வகையான பயிற்சியாகும். நாடகப் பாத்திரமாயினும் சரி, திரைக் கதாப்பாத்திரமானாலும் சரி பாத்திரத்தின் தன்மைக்குரிய குணாதிசயத்தையும், உணர்ச்சிகளையும் காட்டும் போது தனது பாதங்கள் கால் சுளுக்குக்கும் வேதனைக்குள்ளும் அகப்பட்டுக் கொள்வதாகக் கூறியுள்ளார். முழுமையான நடிப்பிற்கு கால்களின் பாதங்களின் உறுதியும் பொஸிசனுமே ஆதாரம் என்னும் உண்மை கவனிக்கத்தக்கது. அதனால் தான் நாடகப்பட்டறையில் பயிற்சி பெற்ற நடிகனின் நடிப்பிற்கும் தற்கால நடிகர்களின் நடிப்பிற்கும் வித்தியாசம் தெரிகிறது. ஆங்கில மேடை நடிகாராகவிருந்து திரைப்பட நடிகராகப் புகழ்பெற்ற மறைந்த நடிகர் ரிச்சர்ட் பேற்ரன் மற்றும் சார்ன்ஸ்ரன் ஹெஸ்ரன், அன்ரனி குயின், சார்ள்ஸ் போயர் ஆகியாரது காலடித் திருப்பங்களை நமது சிவாஜி அவர்களது நடிப்பிலும் காலடித்திருபங்களிலும் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது!

கால்நடை அழகைத் தனித்துக் காட்டுவதற்கென்றே அவரது கால்களுப்பின்னால் கமராவை ஓடவைத்த பெருமை சிவாஜிக்கேயுரிய தனித்திறமையாகும். " இது சிவாஜி நடை" என்று எந்தக்காலமும் சொல்லக்கூடிய தனி அழகு வாய்ந்த நடையழகால் தனிமுத்திரை பதித்தவர் நமது சிவாஜி அவர்கள்.

*காட்சிகள் அடுத்த வாரமும் விரியும்..- வீணை மைந்தன்*



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 916



## அளவெட்டி, ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம், யாழ்ப்பாணம்

'' அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா – நன்புருகி
ஞானச் சுடர்விளக்கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான். ''

புராதன தமிழ் மக்கள் தேடிவைத்த ஆத்மீகச்செல்வங்களாக சைவமும், வைணவமும் திகழ்கின்றன. இவை இரண்டும் இறை நாம பேதமல்லாத தத்துவங்களையும், கொள்கைகளையும் கொண்டனவாக விளங்குகின்றன. சைவர்கள் சிவத்தையும், வைணவர்கள் விஷ்ணுவையும் வழிபடுவதும், ஒன்றிடை மற்றொன்றைக் காண்பதும் பெருவழக்காய் நிலைத்து விட்ட இந்து சமரசமாகக் காணப்படுகின்றது. "கோயில் இல்லா ஊரிலே குடியிருக்க வேண்டாம்" என்ற முதுமொழியால் அறிவூட்டப்பட்ட உறுதியான பாரம்பரியத்தைக் கொண்ட தமிழப்பெருங்குடி மக்கள், சைவத்தையும், வைணவத்தையும் இரு கண்போலக் காத்து வழிபட்டு வருகின்றனர். ஈழநாட்டிலே சிவாலயங்களே பெருமளவிற் காணப்படுகின்றன. வைணவ ஆலயங்கள் சிலவாகக் காணப்பட்டபோதிலும் இவ்வாலயங்களிலும் சைவமக்களே வழிபாடியற்றி வருகின்றனர். வைணவ வழிபாட்டுமுறை, சைவ பாரம்பரியத்திற்குப் பொருத்தமாக அமைந்திருப்பதால், சைவமக்கள் வைணவ வழிபாட்டு முறையிலும் ஈடுபாடு கொண்டு வணங்கி வருவது கண்கூடு.

சிவலிங்கத் திருமேனியிலும் மூன்று அம்சங்கள் விளங்குவதை சைவத்திருக்கோயில் கிரியைநூல்கள் விரிவாக விளக்கியுள்ளன. ஒன்று பிரம்மபாகம், மற்றையது விஷ்ணுபாகம், மூன்றாவது உருத்திர பாகம் எனக் கூறப்பட்டுள்ளது. விஷ்ணுபாகம் என்பது சிவலிங்கத் திருமேனியின் நடுப்பாகமாக அமைகின்றது. இவ்வாறே உமைக்கும் திருமாலுக்கும் வேற்றுமை காணாத அப்பர் சுவாமிகள், திருத்தாண்டகமொன்றில் சிவபெருமானைத் "திருமாலோர் பாகத்தான்" என்றும், "அரியலால் தேவியில்லை ஐயன் ஐயாறனார்க்கே" என்றும் கூறியவை நோக்கற்தக்கது. திருமாலையும் தனது சக்திகளுள் ஒரு சக்தியாகக் கொண்டு ஒரு பாகத்தில் உடையவன் என்பது இதனால் தெளிவாகின்றது. சிவபிரானது சக்தியிலும் திருமால் வடிவம் இணைந்துள்ளமை கண்கூடு. சிவபிரானது சக்தி நான்காகப் பிரிந்து செயலாற்றுகின்றது. இன்பத்தில் பவானியும், ஆடவரிடத்துத் திருமாலும், வெகுளியில் காளியும், போரில் துர்க்கையும் என சிவனது சக்தி வெளிப்படுகின்றது என சிவாகமங்களிலே கூறப்பட்டுள்ளது. இவ்வாறான சமரச மனப்பான்மையின் அடிப்படையில் சைவமும், வைணவமும் ஈழத்தமிழ்மக்களால் போற்றப்படுகின்றது. சைவர்கள் பெரும்பான்மையினராக வசிக்கும் இடங்களிலும் சிவாகமம் கூறும் மரபை அடிப்படையாகக் கொண்டு, தனி வைணவ ஆலயங்களும் பாஞ்சராத்திர ஆகம முறைகளைத் தழுவி நிறுவப்படலாயின. அதேமுறைக்கமைய வழிபாடுகளும் நடைபெறுகின்றது.

ஈழத்தின் பல ஆலயங்களின் அமைவுக்கு இறைவனது திருஎண்ணமே காரணமாகக் காணப்பட்டுள்ளது. கால தேதச வர்த்தமானங்களுக்கமைய குறிப்பிட்ட ஓர் இடத்தைத் தெரிவு செய்து அங்கு எழுந்தருள நோக்கங்கொண்டு, பல்வேறு நிலையிலே தனது சக்தியை வெளிப்படுத்தி, மக்களை ஆட்கொண்டு அருள்வாக்களித்து கோவில்கள் அமையதெய்வ அனுக்கிரகம் கிடைத்தமையை ஆலய வரலாறுகள் தெளிவுபடுத்தியுள்ளன. இவ்வாறாக தெய்வ அனுக்கிரகத்தின் காரணமாக ஏற்படுத்தப்பட்ட கோயிலாக அளவெட்டி ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம் விளங்குகின்றது. இறைவன் தானே விரும்பி எழுந்தருளிய இவ்வாலயம் சுமார் 200 வருடங்களுக்கு முற்பட்ட வரலாற்றினைக் கொண்டதாக விளங்குகின்றது. அளவெட்டி ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தின் வரலாற்றை இரு நிலைகளிலே நோக்கமுடியும். ஆரம்பகாலத்தில் மக்களால் வழிபாடியற்றப்பட்டு பின்னர் கைவிடப்பட்டநிலையிலேயே காணப்பட்டுள்ளது. இவ்வாறு காணப்பட்ட ஆலயத்தின் பெருமையை உணர்ந்து, இன்றுள்ள நிலைக்குக் கொண்டு வந்தவர் அருட்கவி. சீ. விநாசித்தம்பிப் புலவர் அவர்கள்.

தற்போது ஆலயம் இருக்கும் பகுதி முன்பு பற்றைக்காடாக இருந்துள்ளது. இப்பகுதியில் அழிஞ்சில், கடுகு, நாவல், விளா, நுணா, நாவல், வாகை, மாவிலங்கு முதலிய மரங்களும் செடிகொடிகளும் இடையிடையே காணப்பட்டன. அளவெட்டியிலுள்ளவர்கள் சங்கானைக்குப்போகும் நடைபாதை இதற்கூடாகக் காணப்பட்டது. இப்பகுதியில் ஆடுமாடுகள் மேய்வது வழக்கம். இவ்வாறு மேய்ந்து திரியும் ஆடுமாடுகள் நீர் அருந்த ஒரு கேணியொன்று இப்பகுதியிலுள்ள முதியவர்களால் வெட்டப்பட்டது. காலப்போக்கில் இக்கேணியடியில் சில அற்புதங்கள் நிகழ்ந்தது. ஒருநாள் வழிப்போக்கன் ஒருவன் இக்கேணியடியைக் கடந்துசெல்ல நேரிட்டது. அப்பொழுது கேணியடியில் காணப்பட்ட விளாமரம், வாகைமரம், நுணாமரம் இவற்றிற்கு இடையே காணப்பட்ட புற்றுக்களின் மத்தியில் இரண்டு நாகபாம்புகள் படமெடுத்து ஆடிக்கொண்டிருந்ததைக் கண்டான். இவ்வாறு இரு நாகங்களும் படமெடுத்தாடுவதை அவ்வூரவர் பலரும் கண்டுள்ளனர். இவ்வாறான நிலையில் குறிப்பிட்ட நாளொன்றில் ஒரு சிறுவன் பாம்புகளுக்கு அருகில்நின்று பின் மறைவதையும் பலர் அவதானித்தனர். சில நாட்களின் பின் ஒரு பாம்பு மாத்திரமே காட்சியளித்தது. இவ்வாறான காட்சிகளைக் கண்ட ஊரவர்கள் மனதிலே பயமேற்பட்டது.

இயற்கையின் அனர்த்தங்களைக் கண்ட மனிதன், பயத்தின் காரணமாக அவற்றைத் தெய்வீகநிலைக்கு உயர்த்தி வணங்கியுள்ளான். அவ்வாறே காடுகளில் வாழ்ந்த ஆதிமனிதர்கள் பாம்பினால் ஏற்படும் இன்னல்களைக் கண்டு பயந்து அவற்றையும் தெய்வமாகப் போற்றியுள்ளனர். இவ்வாறு எழுந்த பயத்தின் சூழ்நிலையிலேயே, அளவெட்டி ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தின் ஆரம்பமும் காணப்பட்டது. பாம்பையும் அதன் அருகில் சிறுவனையும் கண்டு பயந்த மக்கள் அவ்விடத்திலே ஏதோவொரு தெய்வீகநிலை இருப்பதாக எண்ணி, அவ்விடத்திலே ஒரு கல்லை வைத்து நாகதம்பிரான் எனப் போற்றி வணங்க ஆரம்பித்தனர்.

*வளரும்...*

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனையசொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களதுவிருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.

தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077




ALL DEBT SOLUTIONS CR PLAN

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

# அன்பின் தொனி - 581

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபத்தின் வல்லமை**

**என் தேவனே, என் ஆத்துமா எனக்குள் கலங்குகிறது**

மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல, தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது. என் ஆத்துமா தேவன்மேல், ஜீவனுள்ள தேவன்மேலேயே தாகமாயிருக்கிறது, நான் எப்பொழுது தேவ- னுடைய சந்நிதியில் வந்து நிற்பேன்? உன் தேவன் எங்கே என்று அவர்கள் நாள்தோறும் என்னிடத்தில் சொல்லுகிறபடியால், இரவும் பகலும் என் கண்ணீரே எனக்கு உணவாயிற்று. முன்னே நான் பண்டிகையை ஆசரிக்கிற ஜனங்களோடே கூட நடந்து, கூட்டத் தின் களிப்பும் துதியுமான சத்தத்தோடே தேவாலயத்திற்குப் போய்வருவேனே, இவைகளை நான் நினைக்கும்போது என் உள்ளம் எனக்குள்ளே உருகுகிறது. என் ஆத்துமாவே, நீ ஏன் கலங்குகிறாய்? ஏன் எனக்குள் தியங்குகிறாய்? தேவனை நோக்கிக் காத்திரு, அவர் சமுகத்து இரட்சிப்பினிமித்தம் நான் இன்னும் அவரைத் துதிப்பேன். என் தேவனே, என் ஆத் துமா எனக்குள் கலங்குகிறது, ஆகையால் யோர்தான் தேசத்திலும் எர்மோன் மலைகளிலும் சிறுமலையிலுமிருந்து உம்மை நினைக்கிறேன். உமது மதகுகளின் இரைச்சலால் ஆழத்தை ஆழம் கூப்பிடுகிறது, உமது அலை- களும் திரை களும் எல்லாம் என்மேல் புரண்டுபோகிறது. ஆகிலும் கர்த்தர் பகற்காலத்திலே தமது கிருபையைக் கட்டளையிடுகிறார், இராக்காலத்திலே அவரைப் பாடும் பாட்டு என் வாயிலிருக்கிறது, என் ஜீவனுடைய தேவனை நோக்கி விண்ணப்பஞ்செய் கிறேன். நான் என் கன்மலையாகிய தேவனை நோக்கி: ஏன் என்னை மறந்தீர்? சத்துருவினால் ஒடுக்கப்பட்டு, நான் ஏன் துக்கத்துடனே திரியவேண்டும் என்று சொல்லுகிறேன். உன் தேவன் எங்கே என்று என் சத்துருக்கள் நாள்தோறும் என் னோடே சொல்லி, என்னை நிந்திப்பது என் எலும்புகளை உருவக்குத்துகிறதுபோல் இருக்கிறது. என் ஆத்துமாவே, நீ ஏன் கலங்குகிறாய்? ஏன் எனக்குள் தியங்குகிறாய்? தேவனை நோக்கிக் காத்திரு, என் முகத்திற்கு இரட்சிப்பும் என் தேவனுமாயிருக்கிறவரை நான் இன்னும் துதிப்பேன்.- **சங்கீதம் 42: 1-11**

**என் அரணாகிய தேவன் நீர், ஏன் என்னைத் தள்ளிவிடுகிறீர்?**

தேவனே, நீர் என் நியாயத்தை விசாரித்து, பக்தியில்லாத ஜாதியா- ரோடு எனக்காக வழக்காடி, சூதும் அநியாயமுமான மனு'னுக்கு என்னைத் தப்புவியும். என் அரணாகிய தேவன் நீர், ஏன் என்னைத் தள்ளிவிடுகிறீர்? சத்துருவினால் ஒடுக் கப்பட்டு நான் என் துக்கத்துடனே திரியவேண்டும்? உமது வெளிச்சத்தையும் உமது சத்தியத்தையும் அனுப்பியருளும், அவைகள் என்னை நடத்தி, உமது பரிசுத்த பர்வதத்திற்கும் உமது வாசஸ்தலங்களுக்கும் என்னைக் கொண்டுபோவ தாக. அப்பொழுது நான் தேவனுடைய பீடத்தண்டைக்கும், எனக்கு ஆனந்த மகிழ்ச்சியாயிருக்கிற தேவனிடத்திற்கும் பிரவேசிப்பேன். தேவனே, என் தேவனே, உம்மைச் சுரமண்டலத்தால் துதிப்பேன். என் ஆத்துமாவே, நீ ஏன் கலங்குகி றாய்? ஏன் எனக்குள் தியங்குகிறாய்? தேவனை நோக்கிக் காத்திரு, என் முகத்திற்கு இரட்சிப்பும் என் தேவனுமாயிருக் கிற- வரை நான் இன்னும் துதிப்பேன்- **சங்கீதம் 43: 1-5**

**தேவனுக்குள் நித்தம் மேன்மை பாராட்டுவோம்**

தேவனே, எங்கள் பிதாக்களுடைய நாட்களாகிய பூர்வநாட்களில் நீர் நடப்பித்த கிரியைகளை அவர்கள் எங்களுக்கு அறிவி த்தார்கள், அவை- களை எங்கள் காதுகளால் கேட்டோம். தேவரீர் உம்முடைய கையினாலே ஜாதிகளைத் துரத்தி, இவர் களை நாட்டி, ஜனங்களைத் துன்பப்படுத்தி, இவர்களைப் பரவப்பண்ணினீர். அவர்கள் தங்கள் பட்டயத்தால் தேசத்தைக் கட்டிக்கொள்ளவில்லை, அவர்கள் புயமும் அவர்களை இரட்சிக்கவில்லை, நீர் அவர்கள்மேல் பிரியமாயிருந்தபடியால், உம் முடைய வலதுகரமும், உம்முடைய புயமும், உம்முடைய முகத்தின் பிரகாசமும் அவர்களை இரட்சித்தது. தேவனே, நீர் என் ராஜா, யாக்கோபுக்கு இரட்சிப்பைக் கட்டளையிடும். உம்மாலே எங்கள் சத்துருக்களைக் கீழே விழத்தாக்கி, எங்களு க்கு வி- ரோதமாய் எழும்புகிறவர்களை உம்முடைய நாமத்தினால் மிதிப்போம். என் வில்லை நான் நம்பேன், என் பட்டயம் என்னை இரட்சிப்பதில்லை. நீரே எங்கள் சத்துருக்களினின்று எங்களை இரட்சித்து, எங்களைப் பகைக்கிறவர்களை வெட் கப்படுத்துகிறீர். தேவனுக்குள் நித்தம் மேன்மை பாராட்டுவோம், உமது நாமத்தை என்றென்றைக்கும் துதிப்போம். நீர் எங்களைத் தள்ளிவிட்டு, நாணப்பண்ணுகிறீர், எங்கள் சேனைகளுடனே செல்லாதிருக்கிறீர். சத்துருவுக்கு நாங்கள் இடை ந்து பின்னிட்டுத் திரும்பிப்போகப் பண்ணுகிறீர், எங்கள் பகைஞர் தங்களுக்கென்று எங்களைக் கொள்ளையிடுகிறார்கள். நீர் எங்களை ஆடுகளைப்போல இரையாக ஒப்புக்கொடுத்து, ஜாதிகளுக்குள்ளே எங்களைச் சிதறடிக்கிறீர். நீர் உம்முடைய ஜனங்களை இலவசமாக விற்கிறீர், அவர்கள் கிரயத்தினால் உமக்கு லாபமில்லையே. எங்கள் அயலாருக்கு எங்களை நிந்தையாகவும், எங்கள் சுற்றுப்புறத்தாருக்குப் பரியாசமும் சக்கந்தமுமாகவும் வைக்கிறீர். நாங்கள் ஜாதிகளுக்குள்ளே பழமொழியாயிருக்கவும், ஜனங்கள் எங்களைக்குறித்துத் தலைதுலுக்கவும் செய்கிறீர். நிந்தித்துத் தூஷிக்கிறவனுடைய சத்தத்தினிமித்தமும், சத்துருவினிமித்தமும், பழிவாங்குகிறவனிமித்தமும், என் இலச்சை நித்தம் எனக்கு முன்பாக இருக்கிறது, என் முகத்தின் வெட்கம் என்னை மூடுகிறது. இவையெல்லாம் எங்கள்மேல் வந்திருந்தும், உம்மை நாங்கள் மறக்கவும் இல்லை, உம்முடைய உடன்படிக்கைக்குத் துரோகம்பண்ணவும் இல்லை. நீர் எங்களை வலுசர்ப்பங்களுள்ள இடத்திலே நொறுக்கி, மரண இருளினாலே எங்களை மூடியிருந்தும், எங்கள் இருதயம் பின்வாங்கவும் இல்லை, எங்கள் காலடி உம்முடைய பாதையை விட்டு விலகவும் இல்லை. நாங்கள் எங்கள் தேவனுடைய நாமத்தை மறந்து, அந்நிய தேவ னை நோக்கிக் கையெடுத்திருந்தோமானால், தேவன் அதை ஆராய்ந்து, விசாரியாதிருப்பாரோ? இருதயத்தின் அந்தரங் கங்களை அவர் அறிந்திருக்கிறாரே. உமது நிமித்தம் எந்நேரமும் கொல்லப்படுகிறோம், அடிக்கப்படும் ஆடுகளைப்போல எண்ணப்படுகிறோம். ஆண்டவரே, விழித்துக்கொள்ளும், ஏன் நித்திரைபண்ணுகிறீர்? எழுந்தருளும், எங்களை என்றைக் கும் தள்ளிவிடாதிரும். ஏன் உம்முடைய முகத்தை மறைத்து, எங்கள் சிறுமையையும் எங்கள் நெருக்கத்தையும் மறந்து விடுகிறீர்? எங்கள் ஆத்துமா புழுதிமட்டும் தாழ்ந்திருக்கிறது, எங்கள் வயிறு தரையோடு ஒட்டியிருக்கிறது. எங்களுக்கு ஒத்தாசையாக எழுந்தருளும், உம்முடைய கிருபையினிமித்தம் எங்களை மீட்டுவிடும்.- **சங்கீதம் 44: 1-26**

... தொடரும்

# எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர். குணசிங்கம் கந்தசாமி

தோற்றம் 05-02-1936

மறைவு 07-10-2012



உடுப்பிட்டி சன்னிதி வீதியை பிறப்பிடமாகவும், கனடா - ஸ்காபுறோவை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர். குணசிங்கம் கந்தசாமி அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி.

எம் இதயங்களில் ஒளி வீசிய பூரண நிலவே!
எம் கண்களில் நீர் வரவழைத்தே மறைந்ததேனோ
எம் அருமை தந்தையே!
வாழ்வே மாயமென்று எமக்கு உணர்த்திவிட்டு சென்றனையோ!
பூரண வாழ்வை வாழ்ந்து களித்து விட்டேன் என்று
பூரண நிம்மதியுடன் எம்மைத் தவிக்க விட்டுச் சென்றனையோ!
நல்ல கணவராய் பாசமிகு தந்தையாய்! ஆசை மாமனாய்!
பிரியமிகு தாத்தாவாய்! அன்புச் சகோதரராய்!
குடும்ப ஒளிவிளக்காய்! பண்பிற்கோர் இலக்கணமாய்!
ஊர் போற்ற வாழ்ந்த உத்தமரே!
வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்த எம் அருமை தெய்வத்திற்கு
எமது அஞ்சலிகள்.

என்றும் உங்கள் பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள், சகோதர சகோதரிகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

திதி : 09-10-2020

தகவல்

குடும்பத்தினர் 416-432-5499

SKN
# SKN FINANCIAL
www.sknfinancial.com



அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்

கனடாவில் மிகக் குறைந்த வட்டி வீதத்தில் தங்க அடைவு செய்யக் கூடிய ஒரே அடைவு மாடம்

முழுமையாக காப்புறுதி செய்யப்பட்டது

- $ அவசரப் பணத் தேவையா? புதிய வியாபாரம் தொடங்கப் பணம் தேவையா?
- $ புதிய மனை வாங்குவதில் பணச்சிக்கலா?
- $ உங்கள் மாதாந்த வட்டியை வங்கியில் கட்டும் வசதியும் உண்டு
- $ உங்கள் அடைவுகளை இலகுவாக மீட்பதற்குப் பலவிதமான திட்டங்கள் உள்ளன
- $ வட்டித் தொகைக்கு வரிவிலக்கு பற்றுச் சீட்டு வழங்கபடும்

உங்கள் நகைகளுக்குப் பாதுகாப்பு!..
குறைந்த வட்டி!..(2% முதல்)
நிறைந்த பெறுமதி!...
www.sknfinancial.com

**SCARBOROUGH**
801 Markham Road
(Painted Post Plaza)
Markham & Ellesmere
647-729-5238

**BRAMPTON**
85 Kennedy Road South, Unit 33
( Next to TIM HORTONS )
Kennedy & Steeles
905-499-0800

Carefirst Family Health Team
# Carefirst Family Health Team
## Accepting New Patients



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com



Life Insurance
Don't think twice
Life Insurance · Group Benefits
Critical Illness · RRSP / RESP
Disability
Investments
iNFORCE LIFE Financial Services Inc.
RESP Registered Education Saving Plans
40% - 20% Goverment Grant
Plus additional 15-10% on us.
Start Saving Early
Ajanthan (Ajay) Thavayogarajah
Insurance and Investments
Call Ajay: 416.704.8074

TRAFFIC TICKETS!
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
Peter Joseph
Legal Representative / Paralegal
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

வீடு வாங்க விற்க
Vijay Muthumani
Sales Representative
HomeLife Today Realty Ltd., Brokerage*
*Independently Owned and Operated.
Off: 416-298-3200
Dir 647-963-0705

23rd Years in Publishing
UTHAYAN
உதயன்
Tel : 416-752-1524
Fax: 416-752-6703

NEW CLASS STARTING
புதிய வகுப்புகள் ஆரம்பம்
October 2020
Income Tax
Bookkeeping
(QuickBooks)
Sree
416.438.3350
Seyon Financial Services

ONLY LOCATION IN GTA
OCEAN ACCOUNTING TAX CONSULTANTS
Accounting Services for Personal and Small Business
1646 VICTORIA PARK AVE., SUITE 1
PARK PLAZA (BETWEEN LAWRENCE & EGLINTON)
TORONTO, ON. M1R 1P7
TEL: 416-285-6900
FAX: 416-285-4877
Email: OATC@oceantax.ca Web: www.oceantax.ca
Personal & Corporate Income Tax Returns
Complete Accounting Services

மொன்றியல் நகரில்
உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழ் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

உதயம் 1279 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday October 9, 2020

# "தற்போதைய உலகில் கோவிட்டினால் எழுந்துள்ள பிரச்சனைகளுக்கு தீர்வுகளைக் காண நாம் இணைந்து போராட வேண்டும்"

## கனடாவில் இடம்பெற்ற 'இந்தியாவில் முதலிடுங்கள்' மாநாட்டில் பிரதமர் மோடி



"தற்போதைய உலகில் கோவிட் நோய் காரணமாக எழுந்துள்ள பிரச்சனைகளுக்கு தீர்வுகளைக் காண நாம் அனைவரும் இணைந்து போராட வேண்டும். இந்த நோயின் காரணமாக தோன்றியுள்ள அனைத்து பிரச்சனைகளையும் நாம் வெற்றி கொள்ள முனையவேண்டும். இந்த பிரச்சனைகளை எமது இந்தியா அப்படியே விட்டு வைக்கவில்லை. எமது நாட்டில் உள்ள 800 மில்லியன் மக்களுக்கு இலவச உணவு வழங்கினோம். அங்குள்ள 80 மில்லியன் குடும்பங்களுக்கு இலவச சமையல் வாயு வழங்கினோம். மேலும், இந்த நெருக்கடியான கால கட்டத்தில் தேசத்தில் உள்ள ஏழை மக்கள் மற்றும் விவசாய பெருமக்கள் ஆகியோருக்கு வங்கிகள் ஊடாக பணம் அனுப்பினோம்.இவ்வாறு நாம் தொடர்ந்து எமது மக்களுக்கான பணிகளை ஆற்றுவதில் முழுநேரமாக பணியாற்றி வருகின்றோம். இந்த விடயங்களை இங்கு பகிர்ந்து கொள்வதில் பிரதமர் என்ற வகையில் நான் பெருமையடைகின்றேன்."

இவ்வாறு நேற்று வியாழக்கிழமை கனடாவில் இடம்பெற்ற 'இந்தியாவில் முதலிடுங்கள்" என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற மாநாட்டில் பிரதமர் மோடி முதன்மை உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் "உலகம் முழுவதற்குமான மருந்து தயாரிக்கும் துறையிலும் இந்தியா முக்கிய இடத்தை வகிக்கின்றது என்பதை நான் பெருமையுடன் தெரிவிக்கின்றேன். கோவிட் நோய் ஆரம்பித்த நாள் தொடக்கம், இதுவரை உலகில் உள்ள சுமார் 150 நாடுகளுக்கு மருந்துப் பொருட்களை வழங்கியுள்ளோம். இந்த வருடத்தின் மார்ச் மாதம் தொடக்கம் யூன் மாதம் வரை எமது நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட விவசாய உற்பத்திப் பொருட்கள் மற்றும் உணவுப் பொருட்கள் ஆகியன 23 வீதத்தால் அதிகரித்துள்ளன. இது எப்போது நடந்தது என்றால் எமது நாடு முற்றாக முடங்கியிருந்த வேளையில் தான். எமது நாட்டில் உற்பத்தித் துறை முழுமையாக இயங்கிக் கொண்டிருக்கின்றது.

முக்கியமாக இந்த நோய்க் காலப் பகுதியிலேயே, நோய் எதிர்ப்பு சாதானங்களையும் தயாரிப்பதில் நாம் முன்னின்று உழைத்தோம். எமது நாட்டுக்குத் தேவையான தனிப்பட்ட சுகாதாரப் பாதுகாப்பு உபகரணங்களை தயாரிப்பதில் மாத்திரமல்ல உலகின் பல நாடுகளுக்கும் தேவையானவற்றையும் நாம் தயாரித்தோம். மில்லியன் தொகையான உபகரணங்களை மாதாந்தம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகின்றோம். அத்துடன் முக்கியமாக கோவிட் நோய்க்கு எதிரான தடுப்பு மருந்து தயாராகும் போது, அதை உலக நாடுகளுக்காகவும் நாம் தயாரித்து வழங்குவோம். எனவே நிச்சயமாக கனடாவில் உற்பத்தித் துறையில் உள்ள நீங்கள் அனைவரும் இந்தியாவிலும் முதலிட வரவேண்டும் என்று அன்பாகக் கேட்டுக்கொள்கின்றேன்" என்றார் இந்தியப் பிரதமர் மோடி. (உள்ளே பிரதமர் மோடி அவர்களின் உரை ஆங்கிலத்தில் காணப்படுகின்றது)

# ஒன்றாரியோ பாடசாலைகளுக்கு 60,000 முகக் கவசங்களை வழங்கிய வர்த்தக நிறுவனம்



கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் தற்போது பாடசாலைகள் மீண்டும் திறக்கப்பட்டு, அங்கு மாணவர்கள் வகுப்பறைகளுக்கு நேரடியாக சமூகமளித்தும், வீட்டிலிருந்தவாறே இணையவழி மூலம் பாடங்களை கற்பதும் போன்ற கற்றல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை அனைவரும் அறிவார்கள்.

இந்த கற்றல் நடவடிக்கைகளுக்காக பல மில்லியன் டாலர்களை ஒன்றாரியே அரசாங்கம் மேலதிகமாக செலவு செய்வது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பல வர்த்தக நிறுவனங்கள் தங்களால் இயன்றளவு உதவிகளை ஒன்றாரியோ மாகாண அரசுக்கு வழங்கி வருகின்றன.

இந்த வரிசையில் ஒன்றாரியோ மாகாண அரசின் தமிழ் பேசும் மாகாண சபை உறுப்பினரான லோகன் கணபதி அவர்களின் வேண்டுகோளிற்கு இணங்க, அவரது தொகுதியான மார்க்கம்-தோர்ன்ஹில் தொகுதியில் அமைந்திருக்கும் Kuo Hua Trading Company என்னும் தாய்வான் நாட்டு வர்த்தகப் பிரமுகர் ஒருவரால் நிர்வகிக்கப்படும் நிறுவனம் 60,000 முகக் கவசங்களை அன்பளிப்பாக வழங்கியது. இந்த முகக்கவசங்கள் கையளிப்பு வைபவத்தில், ஒன்றாரியோ மாகாண கல்வி அமைச்சர் கௌரவ Stephen Lecce அவர்கள் நேரடியாகக் கலந்து கொண்டு மேற்படி முகக்கவசங்களை பெற்றுக்கொண்டார்.

அங்கு உரையாற்றிய ஒன்றாரியோ மாகாண அரசின் தமிழ் பேசும் மாகாண சபை உறுப்பினரான லோகன் கணபதி தனது உரையில் " இந்த முகக்கவசங்கள் கையளிப்பு வைபவம் எமது ஒன்றாரியோ மாகாணத்தின் பல்கலாச்சாரப் பெருமைகளை பறை சாற்றுகின்றது. முகக் கவசங்களை அன்பளிப்புச் செய்த வர்த்தக அன்பர் Lisa Chung அவர்களது அர்ப்பணிப்பான சேவையை நான் பாராட்டுகின்றேன். அத்துடன் ஒன்றாரியோ மாகாண பாடசாலை மாணவர்களின் கற்றல் தேவைகளை தனது உயிரினும் மேலாக மதித்து பணியாற்றும் எமது கல்வி அமைச்சர் கௌரவ Stephen Lecce அவர்களையும் பாராட்டுகின்றேன்" என்றார்.

இங்கே காணப்படும் படம் அங்கு எடுக்கப்பட்டதாகும்

நன்றி:- (சிவா)

# கோவிட் காலத்தில் சிறு வியாபாரங்கள், வருமானம் ஆகியவற்றை வலுப்படுத்த ஒன்றாரியோ என் டி பி கட்சியின் திட்டம் வெளியிடப்பட்டது

ஒன்றாரியோ மாகாணத்தில், தொழில் புரிவோருக்கு ஸ்திரமான வருமானமும் தொழில்களுமிருந்தால் தான் கோவிட் 19 இரண்டாம் அலையைச் சமாளிக்கவும், பொருளாதாரத்தை உயிர்ப்பிக்கவும் முடியும் என்ற நிலையில் புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவர் அண்ட்ரியா ஹொர்வத், மற்றும் டோலி பேகம், பாராளுமன்ற உறுப்பினர், ஸ்காபரோ தென்மேற்கு ஆகியோர் புதிய திட்டமொன்றை வெளியிட்டுள்ளனர்.

"கோவிட் -19 பேரிடரினால் எத்தனை தொழில் புரிவோர்கள், சிறு வியாபார உரிமையாளர்கள் தம் வருமானத்தை இழக்கின்றனர் என்பதும், அதனால் நாளாந்த மளிகைப்பொருட்களைக் கொள்வனவு செய்யஇயலாமலும், வாடகை, மோட்கேஜ் முதலியனவற்றைச் செலுத்த முடியாமலும் இடர்ப்படுகின்றனர் என்பதும் தெரியவந்துள்ளது" என்று ஹொர்வத் கூறினார்.

அதிக வேலை வாய்ப்புக்களும், பாதுகாப்புமே கோவிட்-19 இன் இரண்டாவது அலையை முறியடிப்பதற்குத் தேவைப்படுகின்றன என்பது தெளிவு. பின்னடைந்த பொருளாதாரத்தை மீட்கும் பொருட்டு மக்களுக்குப் போதிய ஊதியம் கொடுக்கப்பட வேண்டும் என்பதையும் நாம் அறிவோம். எமது தேவை மக்களுக்கு நம்பிக்கையை அளிக்க வல்லதோர் சக்தி வாய்ந்த திட்டம்".



பேரிடர் ஆதரவு நிதியாக ஒதுக்கிவைக்கப்பட்ட 6.7 பில்லியன் டொலர்களை ஃபோர்ட் அரசாங்கம் நிறுத்தி வைத்துள்ளது என்றும் அந்நிதியின் பெரும்பகுதி மத்திய அரசுக்குரியதாயிருந்து மாகாண அரசுக்கு மாற்றப்பட்டது என்றும் ஒண்டாரியோவின் நிதிப் பொறுப்பு அதிகாரி வெளிப்படுத்தியுள்ளார். ஸ்காபரோ சமூகத்திலுள்ள சிறு வியாபார நிறுவனங்கள் தம் வாடகையைத் தொடர்ந்து செலுத்துவதற்கும், பணியாளார்களுக்கு ஊதியத்தைக் கொடுப்பதற்கும் இந்நிதியின் ஒரு சிறு பகுதியின் மூலம் உதவ முடியும் என்று ஹொர்வத், மற்றும் பேகம் ஆகியோர் கூறுகின்றனர்.